சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

181. முனிவர் காதலும், வேடன் காதலும்

அன்னப் பறவை நடப்பதும், உல்லாசமாகத் தண்ணீரில் மிதந்து போவதும் அதிசயமான கண்விருந்தென்று வருணிப்பதுண்டு : பார்த்துத் தான் வருணித்திருக்கிறார்கள். இமயமலைச் சாரலில் கைலையங்கிரிக்குக் கீழுள்ளதும், 'மானச மடு' என்று கம்பன் குறிப்பிடுவதும், இந்நாளில் 'மானஸஸரோவர்' (மானஸஸரோவரம்) என்று உலகப் புகழ் பெற்றிருப்பதும், 'பொய்கைகளின் கவிதாராணி' என்று ஓர் ஐரோப்பிய ரஸிகர் போற்றியிருப்பதுமான 'புண்ணிய' தீர்த்தத்திலே அன்னங்கள் மிதந்து செல்லும் அழகை இன்றைய யாத்திரிகர்களும் விசேஷமாக வருணிக்கிறார்கள். ராஜஹம்ஸம் இன்பப் படகுபோல் மிதந்து செல்லுகிறதென்றால், சீதாராம லட்சுமணர்களுடன் கம்பீரமாகச் செல்லும் (குகனுடைய) இன்பத் தோணியை மடங்கி விழும் அலைகளுக்கிடையே முடுகிச் செல்லும் அன்னம்போலப் போகிறதென்கிறான் கம்பன்.

தோணியும் துறவிகளும்

இந்தத் தோணியின் போக்கையும், ராமனுடைய அவசரமான கட்டளைக் கிணங்கிக் குகன் தோணி ஓட்டும் குதூகலத்தையும், 'நம்மையும் தோணியில் ஏற்றிக் கொண்டு போக வில்லையே!' என்ற பொறாமையும் சிறிது தோன்ற எரியும் தீயில் மெழுகு உருகுவதுபோல உருகித் தோணியையே பார்த்துக் கொண்டிருக்கும் முனிவர்கள் நிற்கும் நிலையையும் இப் பாட்டின் வாயிலாக நாமும் அதிசயமாய்ப் பார்க்கிறோம் :

'விடுநதி கடி(து)'என்றான் ;
　　மெய்உயிர் அனையானும்
முடுகினன், நெடுநாவாய்
　　முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடஅன்னக்
　　கதிஅது செல,நின்ற
இடருறு மறையோரும்
　　எரியுறு மெழுகானார் !

[கடிது — விரைவாக. மெய்உயிர் அனையானும் - (ராமனுக்கு) மெய்யான உயிரை ஒத்த அன்பனான குகனும். முடுகினன் — விரைவாக ஓட்டினான். நெடு நாவாய் - நீண்ட தோணி. முரிதிரை - மடங்கி விழும் அலைகள். நெடு நீர்வாய் — வெள்ளத்தினிடையே. மட அன்னம் — இள அன்னம். கதி அது செல - நடைபோன்ற போக்கில் போக. நின்ற — (கரையில்) நின்ற. இடர் — துயரம் மிகுந்த. மறையோர் — முனிவர்கள். எரியுற - நெருப்பில் இட்ட.]

ஓடம் ஓடுகிறது

தோணி கங்கையில் போய்க் கொண்டிருக்கும்போது இளஞ்சூரியனது பொற்கதிர்கள் ராமனது மேனியில் விழ, அந்த வனப்பின் வெள்ளம் கங்கை வெள்ளத்தின் மீது செல்லும் ஏதோ ஒரு நீல சூரியப் பிரகாசம் போல் ஜொலிக்கிறது சீதையின் கண்களிலே. ஏதேதோ பேசித் தன் குதூகலத்தை அப்படியே கொட்டிவிட ஆசைப்படுகிறது காதலியுள்ளம். அவள் பேசிக்கொண்டே கைக்கு எட்டுகிற கங்கையின் தண்ணீரை அள்ளி யெடுத்து வீசியெறிந்து விளையாடுகிறாள், ஓடத்தில் இருந்தபடியே.

ராமனும் அவள் மொழிகளைப் பால்போல் பருகிக் கொண்டே — ஆனால் அந்த வார்த்தைகளின் பொருளை அவ்வளவாகக் கவனிக்காமலே—அந்த விளையாட்டில் தானும் கலந்து கொள்ளுகிறான். சேல் மீன்கள் துள்ளி விளையாடுவதைப் பார்த்துக்கொண்டே அந்தக் கங்கை வெள்ளத்தை அப்படி அள்ளி வீசி இருவரும் விளையாடிய வண்ணம் உத்ஸாகமாக இருக்க, ஓடம் உல்லாசமாய்ச் சென்று கொண்டிருக்கிறது. அந்த விளையாட்டிலே இருவரும் 'அக்னியனுகிய வேடன் ஏதாவது நினைத்துக்கொள்ள மாட்டானா?' என்ற கவலையே இல்லாமல் ஈடுபடுகிறார்கள். அவனோ பார்த்ததும் பாராததுபோல் துடுப்புக் கோல்களால் நீரைத் துழாவித் துழாவி ஓடத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

இரு புறமும் துடுப்புக்கோலை உபயோகித்து நீரைத் துழாவும்போது நீண்ட கால்களின்மீது செல்லும் பெரிய நண்டுபோலப் போகிறதாம் ஓடம்:

பாலுடை மொழியாளும்
 பகலவன் அனையானும்
சேலுடை நெடுநன்னீர்
 சிந்தினர் விளையாடத்,
தோலுடை நிமிர்கோலில்
 துழவிட எழுநாவாய்
காலுடை நெடுஞெண்டின்,
 சென்றது கடிதம்மா!

[பாலுடைய மொழியாள் — பால் போன்ற இனிய மொழிகளைப் பேசுகின்ற சீதை. பகலவன்—சூரியன். அனையான்—ஒத்தவன். சேலுடை நெடு நன்னீர் — சேல் மீன்கள் துள்ளி விளையாடும் (கங்கை) வெள்ளம். துழவிட—துழாவித்தள்ள. எழுநாவாய்—எழுகின்ற தோணி. காலுடை— பல கால்களையுடைய. நெடுஞெண்டின்—பெரிய நண்டுபோல. கடிது— விரைவாக.]

பாட்டின் ஜாலம்

தோணியின் போக்கை ஆற்றங்கரையிலிருந்து கண்டு காட்டுவது போலிருக்கிறது பாட்டின் போக்கு. பாட்டைப் பாடிப் பாடி அனுபவிக்கும்போது, தடுப்புக்கோல் நிமிர்ந்து சாய்ந்து இருமருங்கும் வெள்ளத்தைத் துழாவுவதும், அந்தக் கோலாகிய கால்களில் ஓடும் நடம், நீண்ட பல கால்களில் நண்டு ஓடுவது போலத் தோன்றுவதும், அப்படியே பிரத்தியட்சமாகின்றன.

அலைகள் முறிந்து விழுந்து சிதறி விளையாடுவதும், மீன்கள் துள்ளி விளையாடுவதும், பால சூரியனின் தங்கக் கிரணங்கள் கங்கையின் நீரிலும் ராமன் மேனியிலும் படிந்து விளையாடுவதும், சீதைக்குத் தானும் விளையாட வேண்டுமென்ற உத்ஸாகத்தைத் தோற்றுவிக்க, அவளும் ராமனுங் கூட அம்மகிழ்ச்சியில் திளைத்து விளையாடும் அந்தக் காதலர் காட்சியையும் அப்படியே பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். 'சீதைபோல் ராமனும் விளையாடுகிறானே! இருவரும் விளையாட்டுப் பிள்ளைகள் போல், குழந்தைகள் போல், கொஞ்சி விளையாடுகிறார்களே!' என்று அதிசயிக்கிறோம். ராமன் மௌனமாய்ப் பருகும் அந்தப் 'பால் மொழி'களும் இன்னதென்று விளங்காமலே கலகலவென்று காதில் விழுவது போலத் தோன்றுகிறது. இவ்வளவு இந்திர ஜாலமும் காட்டுகிறது இப்பாட்டு.

உயிரை அர்ப்பணம் செய்த காதல்

கங்கைத்தாய், தானே அலைக் கையால் ஏந்தி யாருக்கும் யாதொரு சிரமமும் இல்லாமல் அக்கரையில் சேர்த்து விட்டது போலத் தோன்றுகிறதாம், தோணி கரை சேர்ந்ததும். ராமன் தோணியிலிருந்து குதித்துக் குகனை முகம் நோக்கி, 'அன்ப! சித்திர கூட மலைக்கு போகும் வழி எது?' என்று வினவுகிறான். அப்போது குகனுடைய எண்ணங்களை — பக்தியை — இரக்கம் தழுவிய அன்பை என்னென்பது? இந்த உணர்ச்சிகள் அகத்திலே ஒரு கங்கையாகப் பெருக, அந்த அலைபட்ட வெள்ளத்தின் மீது ஒரு தோணி போல் எழுகின்றது ஓர்



ஆசை. 'ராமனுக்காக, ராமனுடன் வாழ வேண்டும் வரிலே' என்ற ஆசை போய், 'ராமனுக்காக உயிரை விட வேண்டும்!' என்ற ஒரு புதிய ஆசை மேலோங்குகிறதாம் :

அத்திசை உற்(று)ஐயன்
அன்பனை முகம்நோக்கிச்,
'சித்திர கூடத்தில்
செல்நெறி பகர்'என்னப்,—
பத்தியின் உயிர்ஈயும்
பரிவினன் அடிதாழா,
'உத்தம! அடிநாயேன்
ஓதுவ(து) உள(து)'என்றான்.

[அத்திசை – எதிர்த் திசையாகிய அக்கரை. செல்நெறி – போகும் வழி. பகர் – சொல்லு. பத்தியின் – பக்தியினால். உயிர்ஈயும் – உயிரையே கொடுக்கக்கூடிய. பரிவினன் – அன்பினன். அடிதாழா – அடி தாழ்ந்து. உத்தம – உத்தமனே. அடிநாயேன் – நாய் போன்ற அடியேன். ஓதுவது – பக்தியுடன் தெரிவித்துக் கொள்வது. உளது – உண்டு.]

ராமன் வழி கேட்டதும், குகன், 'நீங்கள் போகத்தான் வேண்டுமென்றால், அடியேனையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்' என்று மன்றுகிறான். எதற்காக அழைத்துச் செல்லவேண்டும்? 'வழியில்லாத காட்டிற்குள்ளும் வழிதேடிக் கொடுப்பேன்' என்கிறான். 'மிகச் சிறந்த காய் கனிகளும் தேனும் தேடிக் கொடுப்பேன்' என்கிறான். 'அங்கங்கே போகும் வழியில் வசிக்கக் குடிசை போட்டுக் கொடுப்பேன்' என்கிறான். 'ஒரு நொடிப் போதும் உங்களைப் பிரிந்திருக்கமாட்டேன். பிரிந்து இருக்க முடியுமா? உங்களுடன் காட்டுக்கு வர அனுமதி கிடைத்தால் உங்களுக்கு வேண்டிய பணிவிடையெல்லாம் செய்வேன்' என்கிறான். ராமன் அந்த ஹிருதயத்தைக் கண்டு அதிசயித்து நிற்கிறான்.

குகன் மேலும் பேசுகிறான்: 'காடுகளில் — சித்திரகூட மலைக்காடு அல்லவா?—புலிகள் இருக்குமே! நான் அவற்றை வேட்டையாடி, உங்கள் குடிசையைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் துஷ்ட மிருகங்களே இல்லாதவாறு அழித்தொழிப்பேன்!' என்கிறான். மான்கள் போன்ற சாதுப் பிராணிகள் வாழ்கின்ற காட்டுப் பகுதியைத் தேடிக் கண்டு பிடிப்பதாகவும் கூறுகிறான். 'நீங்கள் விரும்பிய பொருளை நாடித் தருவேன்; இட்ட கட்டளைகளையெல்லாம் செய்து முடிப்பேன்!' என்று உறுதி கூறுகிறான். காட்டிலே இராப்பொழுதில் வெளியேபோய் ஏதேனும் கொணர்ந்து தரவேண்டுமென்று அவர்கள் கட்டளையிட்டாலும் அப்படிப்பட்ட கட்டளைகளையும் நிறைவேற்றத் தயார் என்று குறிப்பிட்டு,

இருளினும் நெறிசெல்வேன்!

[நெறி — வழி.]

என்கிறான்.

வேடனல்லவா? இருட்டிலும் கண் தெரியுமாம்; இருட்டிலும் பயமில்லையாம். ஏன்? 'வில் இருக்கிறது, பயமில்லை' என்கிறான், — 'கடவுள் இருக்கிறார், பயமில்லை!' என்று சொல்லும் பக்தனைப் போலே!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

182. நால்வர் ஐவரானது!

ராமனுக்கும் பகைவர் இருப்பார்களா, இருக்க முடியுமா? இப்படியும் ஓர் அழகு இருக்க, காதலித்துப் பணி செய்ய ஆசைப்படும் உணர்ச்சி தவிர, பகைமை யுணர்ச்சியும் ஏற்பட முடியுமா? அப்படிப் பகைவர் ஒரு வேளை ஏற்படுவாராயின், 'நான் ஒருவன் இருக்கிறேன் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்!' என்கிறான் குகன். எதற்காக? ராமனுக்காக உயிர் கொடுப்பதற்குத்தான் இருக்கிறானும். ராமனுக்காக உயிர் வாழவும் இப்போது ஆசை யில்லை; 'ராமனுக்கு முன்னே உயிரை விட வேண்டும்' என்ற ஆசைதான், காதல்தான்!

கொம்பிலே கனிந்தது

இப்படி உயிர்த் தியாகம் செய்ய விரும்புகிறவன் குற்றம் செய்கிறவனா யிருக்கலாகாது என்பது காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போர் விதி. இந்த விதியையும் 'கல்லாக் கலை'யாகக் கற்றுக் கொண்டவனைப் போல் பேசுகிறான் குகன்.

'மருவலர் எனின், முன்னே
மாய்குவென், வசை இல்லேன்!
பொருவரு மணிமார்பா!
போதுவென் உடன்' என்றான்.

[மருவலர்—பகைவர். மாய்குவென்—உயிரை விடுவேன். பொருஅரு மணிமார்பா—ஒப்பற்ற அழகிய மார்பையுடைய ராமனே. போதுவென்—வருவேன்.]

'ராமா! உனக்காக உயிரைக் கொடுக்க ஆசையுள்ளவன்; வசை இல்லாதவன்!' என்று தன் நோக்கத்தை அறிவித்துக் கொள்ளும் சத்தியாக்கிரக வீரம்; ராமனிடம் குகனுக்குத் தோன்றிய நட்புக் காதல் என்ற கற்பகத் தருவில் கொம்பிலே கனிந்த கனி. வேடனுக்குக் கிடைத்த இந்த

'கிறிஸ்து தர்மம்' நம் கண்ணையும் கருத்தையும் கூசச் செய்கிறது. ஆனால், 'ஒப்பற்ற அழகனே! உன்னுடன் வருவேன், வரத்தான் செய்வேன்' என்று பிடிவாதம் செய்யும் குழந்தைக் குணம் நமக்கும் எட்டக்கூடிய நட்புக் கனி, காதற் கனி—நமக்கும் பிடிபடக்கூடிய குழந்தைக் கற்பகம்.

சிகர ஜோதி

லட்சுமணனைக் காட்டுக்கு அனுப்பி வைக்கும்போது, லட்சுமணனுடைய தாய் பிள்ளையை நோக்கி. 'ராமனுக்குத் தம்பியாக நீ போக வேண்டாம், போகவே வேண்டாம்; அடியார் போலப் பணி செய்யத்தான் போகவேண்டும்!' என்றாள்; அப்படி லட்சுமணன் நடந்துகொள்ள வேண்டுமென்று தாய் ஆசைப்பட்டாள். ஒருவரும் தனக்குக் கட்டளை யிடாமலே குகனும் அப்படிச் செய்ய ஆசைப்படுகிறான்.

பின்னும் கட்டளையிட்டாள் லட்சுமணன் தாய்.

'மன்னும் நகர்க்கே, இவன்வந்திடின்,
வா;அ தன்றேல்,
முன்னம் முடி!'யென்றனள், பால்முலை
சோர நின்றாள்.

[மன்னும்நகர்—அயோத்திமா நகரம். அது அன்றேல்— அப்படி இல்லாமற் போனால். முன்னம் முடி.—(ராமனுக்கு) முன்னமே உன் உயிரை முடித்துக் கொள். சோர —சொரிய.]



'ராமனுக்கு முன்னம் உயிரைவிட வேண்டும்' என்ற தாயின் கட்டளை லட்சுமணனுக்குத்தான்,குகனுக்கில்லை! இப்படிப் பட்ட நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லாமலேயே, 'ராமா! உனக்கு முன்னே முடிந்துபோவேன்!' என்ற திட சங்கற்பம்—ஆசை—குகனுள்ளத்தில் இடம் பெறுகிறது.

லட்சுமணனுக்கும் ராமனுக்கும் உள்ள உறவுபோல் ஏதாவது உறவு இருக்கிறதா, குகனுக்கும் ராமனுக்கும் இடையே? அநாகரிகக் காட்டு மனிதனுக்கும் சூரியகுல சிகர ஜோதிக்கும் என்ன உறவு இருக்க முடியும்? ஆகவே, குக-ராம நட்பிற்கு மேலான நட்புக் காதலை வாழ்விலோ, கதையிலோ வேறு எங்கே பார்க்க முடியும்? 'சண்டாள சிநேகம்' என்று 'வைதிகர்கள்' பழித்துப் பேசக் கூடிய இந்த நிகழ்ச்சியை நட்புக் காதலின் மகோன்னத நிலையாக—சிகர ஜோதியாகக்—காட்டும் கம்பன் மேதையை என்னென்பது?


இந்த உரிமையும் வேண்டுமா?

'நானும் கூட வருவேன்' என்ற குகனுடைய வேண்டுகோளுக்குப் பதில் சொல்லுகிறான் ராமன்:

அன்னவன் உரைகேளா,
அமலனும் உரைநேர்வான் :
'என்உயிர் அனையாய்நீ,
இளவல்உன் இளையான்,இந்
நன்னுதல் அவள்நின்கேள்,
நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யது,நான்உன்
தொழில்உரி மையின்உள்ளேன் !'

[அன்னவன் — அந்தக் குகன். உரைகேளா — வார்த்தையைக் கேட்டு. அமலன் — குற்றமற்ற ராமன். உரை நேர்வான் — பதில் சொல்லுகிறான். அனையாய் — ஒத்தவனா யிருக்கிறாய். இளவல் — தம்பி. நன்னுதல் அவள் — அழகிய நெற்றியை யுடையவள் ; (இங்கே) சீதை. கேள்—உறவு ; நட்பு ; (இங்கே) தோழி. நளிர் — குளிர்ந்த. உன் தொழில் உரிமை—தோணி ஓட்டும் உன்னுடைய தொழிலிலும் உரிமை.]

தனக்காக உயிரையும் பரித்தியாகம் செய்ய விரும்பிய குகனைப் பார்த்து, 'நீயே எனக்கு உயிர் !' என்றான் ராமன். பிறகு, தம்பி லட்சுமணனை வேடனுக்கும் தம்பி ஆக்குகிறான்: நாம் திகைத்துப் போகிறோம். அதற்கும் மேலாக, 'இந்தச் சீதைப் பெண் இருக்கிறாளே, இவள் உனக்குத் தோழி !' என்றும் கூறுவது நம்மைப் பிரமிக்கச் செய்து விடுகிறது. அப்பால், 'நான் ஆளப் போகும் ராஜ்யம் உன்னுடையது !' என்று ராமன் ஒப்புக்கொள்ளும் போது, நம்முடைய பிரமிப்பு அதிகமாகிறது,—'ராஜ குலமும் வந்து விட்டதே வேடனுக்கு !' என்று.



கடைசியாக, தன் ஆட்சித் தொழிலில் அவனுக்கு உரிமை யளித்தது போல், தோணி துழையும் உன் தொழிலிலும் எனக்கு உரிமை யுண்டு!' என்று பாத்தியதை கொண்டாடுகிறன். இப்படி உரிமை கேட்டவர் உண்டா, கேட்கிறவர் உண்டா,—வீட்டுக்குள்ளேயே குறுக்குச் சுவர்கள் போட்டுத் துண்டாடிப் பிரிவினை கேட்கும் இக்காலத்திலே?

நட்புக் காதலில் கனிந்து வரும் உறவல்லவா? இப்படி 'நட்புக் கலத்தல்' தற்கால நாகரிகத்தில் அசாத்தியம் என்றே தோன்றுகிறது. இந்த நாகரிக தேவியின் ஜாதகத்தில் இத்தகைய நட்புக் கிரகமே கிடையாது!—என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி நட்பாட மாத்திரம் இன்றைய மனிதர்களும் நாடுகளும் கற்றுக்கொள்ள முடியுமானால், கலியுகம் ஓடிப்போய், உண்மையான சம தர்ம யுகம் ஓடி வந்து குதித்து விடாதா?

ராமன் இவ்வாறு நட்பாடிய போதிலும், குகனைப் பிரிந்து போக வேண்டியதுதான்! பிரிவு என்றால் துன்பம்தானே? இதற்கு ராமன் என்ன சமாதானம் சொல்லப் போகிறான்? கேளுங்கள்:

துன்புள(து) எனின்அன்றோ
சுகம்உள(து); அதுஅன்றிப்,
'பின்(பு)உள(து) இடைமன்னும்
பிரிவுள(து) எனஉன்னேல்;
முன்புளெம் ஒருநால்வேம்;
முடிவுள(து) எனஉன்னா
அன்புள; இனிநாம்ஓர்
ஐவர்கள் உளரானேம்!

[அது அன்றி — அப்படி நினையாமல். பின்பு உளது — (சுகம்) பின்பு உண்டு. இடை மன்னும் பிரிவு—இடையிலே பொருந்தும் பிரிவு. உன்னேல்—எண்ணித் துன்பப் படாதே. முன்பு உளெம் ஒரு நால்வேம் — நால்வராக இருந்தோம் முன்பு. முடிவு உளது என உன்னா—முடிவு உளதென்று கருத முடியாத.]

'இந்த உலகத்தில் துன்பம் இல்லை என்றால், சுகம் எங்கே? வெயிலில் அடி பட்டால்தானே நிழல் அருமையாகத் தோன்றும்? நிழலுக்காக வாவது வெயில் வேண்டியதுதான். இன்ப-துன்ப விவகாரமும் இப்படித்தானே? இடையிலுள்ள பிரிவை எண்ணி ஏங்கிப் போக வேண்டாம். முடிவில்லாத அன்புச் சங்கிலி நம்மை இணைத்து விட்டது. இனி எவ்வளவு தூரம் பிரிந்து போய்க்கொண்டே யிருந்தாலும், சொக்கத் தங்கமான இச் சங்கிலியும் நீண்டு கொடுத்து நம்மை இணைத்துக் கொண்டே யிருக்கும்! இப்படி இருக்கும்போது, நம்மைப் போன்ற நண்பருக்கும் உண்டோ பிரிவு?' என்று ஆறுதல் அளிக்கிறான் குகனுக்கு ராமன்.

மேலும் சொல்லுகிறான்: 'எங்கள் குடும்பம் இப்போது பெருகி விட்டது. முன்பு நால்வராகப் பிறந்தோம் நாங்கள்; இப்பொழுதோ ஐந்து சகோதரர்களாகி விட்டோம்! ஆம், முடிவில்லாத அன்பினால் உன்னுடன் இணைக்கப் பெற்றுத்தான் ஐவர்கள் ஆனேம்!'

இப்படித் தசரத ராஜகுலத்தைப் பெருக்கிக் கொண்டதைக் காட்டிலும், ராமன் குகனுக்கு அளிக்கக்கூடிய பதவியோ பரிசோ இருக்க முடியுமா? இங்கே வெளியிடப் பெறும் சகோதர தர்மத்திற்கு ஈடு வேறு எந்தக் கதையில், எந்தக் காவியத்தில் தான் பார்க்க முடியும்?

யாகத்தினால் பிறந்த நால்வரையும் ராமனது தியாகத்தினால் ஐவராக்கும் இச் சகோதர தர்ம காவியம், கவிதைப் பாதையில் வழிகாட்டுவது போல் வாழ்வுப் பாதையிலும் இன்றைய உலகத்திற்கும் ஒரு நல்ல வழி காட்டக்கூடும்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

183. வழிமேல் வைத்த விழி

'காட்டில் தங்குகின்ற காலமெல்லாம் என்னைத் தாங்கிக் கொஞ்சமும் வருத்தம் ஏற்படாமல் உதவி செய்வதற்கு நீ வருகிறேன் என்கிறாய்! நல்லது, அந்த உதவிக்குத்தான் இதோ உன் தம்பி இருக்கிறானே!' என்று லட்சுமணனைச் சுட்டிக் காட்டுகிறான் ராமன். மேலும், குகனுக்கு அதைக் காட்டிலும் உரிமையானதொன்று இருக்கிறதாம்; ராம காரியத்தைக் காட்டிலும் அந்தக் காரியம் அவனுக்கு முக்கியமானதாம். 'சிருங்கிபேரம்' - என்ற ஆடம்பரப் பெரும் பெயரோடு கங்கைக் கரையின் தென் புறத்திலே அவனுடைய வேடச் சேரிகள் இருக்கின்றன அல்லவா? அந்தச் 'சேரி - ராஜ்யத்'தையும், அவற்றை ஒட்டியுள்ள (வேடர்கள், விலங்குகள் ஆகிய பிரஜைகளோடு கூடிய) காடுகளையும் ஆளும் உரிமைதான் அது: குகனுக்குத் தன் கோல் நோக்கி வாழும் வேடக் குடிமக்களைப் பாது காக்கும் உரிமையே கடமையுமாகும், கைங்கரியமுமாகும். அந்த உரிமையும் கடமையும் கைங்கரியமும் வேடர்கோனுக்கு ராம கைங்கரியத்தைக் காட்டிலும் முக்கியமானவை என்பது ராமன் அபிப்பிராயம்.

அங்கும் ஒரு தம்பி!

'தென்திசைக் காடுகளில் தங்கி அயோத்தி நோக்கி மீண்டு வரப் போகிறேனே, அந்நாளில் உன் இராஜ்யத்திற்கும் வந்து சேர்வேன்' என்று ராமன் சொன்ன பின்பும், குகன் தயங்கி நிற்கிறான், மயங்கி

கிற்கிறான். எனவே, 'நான் சொல்லிய பேச்சுத் தவற மாட்டேன்' என்று ராமன் உறுதி கூறுகிறான். ராம பாணம்போல் குறி தவறாத அந்த ராம வாக்கைக் கொண்டு முடிவாகக் கட்டளையிடுகிறான் :

'அங்குள கிளைகாவற்(கு)
அமைதியின் உளன் உம்பி ;
இங்குள கிளைகாவற்(கு)
யார்உளர் ? உரைசெய்யாய் !
உன்கிளை எனதன்றோ ?
உறுதுயர் உறலாமோ ?
என்கிளை இதுகா, என்
ஏவலின் இளி(து)' என்றான்.

[அங்குள கிளை — அங்கே அயோத்தியிலுள்ள உறவினர் போன்ற மக்கள். காவற்கு — காப்பதற்கு. அமைதியின் உளன் — அமைதியாக இருக்கிறான். உம்பி — உன் தம்பியாகிய பரதன். உறுதுயர் — மிக்க துயர். உறலாமோ — அடையலாமோ. கா — பாதுகாப்பாயாக.]

குகனுக்கு இங்கே ஒரு தம்பி (லட்சுமணன்) இருப்பது போல், அங்கே அயோத்தியிலும் ஒரு தம்பி (பரதன்) இருக்கிறானும். ஆம், இங்கு ஒரு தம்பி ; அங்கு ஒரு தம்பி ! அந்த 'அயோத்தி நகர்த் தம்பி அங்குள்ள நமது உறவினர்களை அமைதியாக ஆண்டு கொண்டிருக்கிறான்; ஆம், ஆட்சி என்ற காவல்-பணிதான் செய்து கொண்டிருக்கிறான்' என்று சொல்லும் ராமன், 'அந்தத் தம்பி இந்த லட்சுமணத் தம்பி போல் இல்லை, சாதுவான, அமைதியான பிரகிருதி ; உள்ளபடியே சாந்த குண பூஷணன் !' என்றும் குறிப்பாகத் தெரிவிக்கிறான்.

நாலு கொள்கைகள்

குடிகளை நெருங்கிய உறவினர்களாக்கி, அரசனையும் குடிகளையும் பல கிளைகளோடு கூடிய ஒரு விருட்சமாக்கி, ராமன் பேசுவதிலேயே ஓர் உயர்ந்த அரசியல்-கொள்கை தொனிக்கிறது. ஆனால், ராமன் குகனுக்குக் 'கிளை'யாகிய வேடர்களையும் தனக்கு 'இங்குள்ள கிளை' என்று சொல்லி, உயர்ந்த சகோதர தர்மக் கொள்கையையும் வற்புறுத்துகிறான். 'என் தம்பி உன் தம்பி; என் மனைவி உன் தோழி!' என்று சொன்னவன், 'என் ராஜ்யம் உன் ராஜ்யம்; உன் தோணி துறையும் தொழிலும் என் தொழில் தான்!' என்று சொல்லித் தொழில்களில் உயர்வு தாழ்வு இல்லை என்ற உயர்ந்த கொள்கையையும் குறிப்பிட்டானல்லவா? இப்போது 'ஆளும் தொழில் என்பதே காவல்-தொழில்தான்' என்று தொனிக்கப் பேசுகிறான். இந்தக் காவலை 'என்னுடைய வேடச் சகோதரர்களுக்கும் பணியாகச் செய்துகொண்டே யிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் நீ என் பிரதிநிதியாக (என் வைஸிராயாக) இருக்கவேண்டும். அந்தத் தம்பியைப் போல் நீயும் அமைதியாகக் கடமையை உணர்ந்து அதைக் கைங்கரிய ரூபமாகச் செய்து கொண்டு சாதுவாக, நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும்' என்று கூறி முடிக்கிறான், குழந்தையிடம் கொஞ்சிப் பேசுவது போலே !

குகனுக்கு இக்கொள்கைக ளெல்லாம் விளங்கி விட்டன என்று சொல்ல முடியாது ; எனினும் ராமன் விருப்பம் புரிந்து விட்டது ; மயக்

கம் தெளிந்து விட்டது. 'ராமன் கட்டளைக்கு இணங்கி நடக்க வேண்டியதுதான்' என்று உறுதி செய்து கொண்டான். எந்தத் துன்பத்தையும் தாங்கிச் சமாளிக்கப் பின் வாங்காதவன் குகன். எந்தத் துன்ப வேட்டைக்கும் துணிந்து போகிற கிராதப் பிரகிருதிதான். எனினும், இந்தப் பிரிவுத் துன்பத்தைத் தாங்க முடிய வில்லை. இது ஒரு நோயாக வருத்துகிறது, — நோய் இன்னதென்றே அறியாத கிராதர்கோனை. என்ன செய்வான், பாவம்! ராமனிடம் விடைபெற்றுக்கொள்கிறான். 'ராமனுக்குத் தெரியாததா? அவன் சொல்வது சரியாகத்தான் இருக்க வேணும்' என்ற ஒரே கொள்கைதான் குகனுக்கு.

ஏன் வீட்டுக்குப் போகவில்லை?

விடைதான் பெற்றுக் கொண்டானே, வீட்டைப் பார்த்துத் திரும்பிப் போகிறானா? அதுதான் இல்லை! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், அவன் என்ன செய்கிறான் என்று:

பணிமொழி கடவாதான்,
 பருவரல் இகவாதான்,
பிணியுடை யவன்என்னும்
 பிரிவினன், விடைகொண்டான்:
அணியிழை மயிலோடும்
 ஐயனும் இளையோனும்
திணிமரம் நிறைகானில்
 சேணுற நெறிசென்றார்.

[பணி மொழி — கட்டளை. பருவரல் — துன்பம். இகவாதான் — நீங்கப் பெறாதவன். அணி யிழை மயில் — அழகு செய்த மயில் போன்ற சீதை. ஐயன் — (இங்கே) ராமன். திணி மரம் — அடர்ந்த மரங்கள். சேண் உற நெறி சென்றார் — அந்தக் காட்டு வழியிலே தூரத்தில் போய் விட்டார்கள்.]

ராமனிடம் விடை கொண்டதும் பிணி பிடித்தவன் போல் நின்றுவிட்டான் குகன். 'அவர் சென்றார், இவர் நின்றார்' என்பது போலே! என்ன பிணி, இந்தக் காட்டு மனிதனுக்கு? வைத்தியருக்குத் தெரியாத பிணி, வைத்திய நூலில் மருந்து இல்லாத பிணி,—காதலர்களுக்கு ஏற்படும் பிரிவுப் பிணிதான்! வாய், விடை கொண்டும், உள்ளம் 'விடை கொள்ள மாட்டேன்!' என்று ஒத்துழையாமை செய்கிறது. பார்த்துக் கொண்டே யிருக்கிறான் காட்டு வழியிலே: இரு புறமும் மரங்கள் நிறைந்து கிளைகள் அடர்ந்திருக்கும் அந்தப் பாதை வழியே ராமன் வெகு தூரம் சென்று மறையும்வரை நோக்கிய வண்ணமாக நிற்கிறான் குகன். கண்ணுக்கு மறைந்தும் கருத்துக்கு மறையவில்லை, அந்த உருவங்கள்! ஏனோதான் இப்படி இந்த வாழ்வில் வானவில்லைப்போல் தோன்றி மறைந்தனர்?

இயற்கை யழகுகள்

கோடைக் காலம். ஆனால், நல்ல வேளையாக அப்போது வானத்தில் மழைக் குறிகள் தோன்றின. ராமனுக்கு வெப்பம் தோன்றாமலிருக்க

வேண்டுமே என்றுதான், அந்தப் பருவம் அப்படி ஜில்லென்று குளிர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது கவிஞனுக்கு:

ஆரியன் வரலோடும்,
அமுதள வியசீதக்
கார்உறு குறி,வானம்
காட்டிய(து) அவண்எங்கும்!

[ஆரியன் — ராமன். அமுது அளவிய — அமுதம் கலந்த. சீதக்கார் — குளிர்ந்த கருநிறமேகம். உறு — பொருந்திய. அவண் — அவ்விடம்.]

நெருப்பைப் போலக் காய்ந்து கொண்டிருந்த வெயிலுக்குப் பின்,— ஆஹா, என்ன குளிர்ச்சி! இந்தக் குளிர்ச்சியில் அமிர்தம் கலந்திருக்க வேண்டும்! இத்தகைய குளிர் காற்றையும், இடையிடையே வானம் பனிநீர்த் திவலை தெளிப்பது போல் சிதறி விழும் சின்னஞ் சிறு மழைத் துளிகளையும் அமிர்தமாக அனுபவித்துக் கொண்டே போகிறார்கள் சீதா ராம லட்சுமணர் மூவரும்.

இரண்டு பக்கங்களிலும் மரக் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து ஒரே இலைப் பந்தல் போட்டிருக்கின்றன. இந்த இயற்கைப் பந்தலின் வழியாக வடிக்கட்டப் பெற்று வரும் சூரிய கிரணங்கள் இளநிலாச் சுடர்கள் போல் இடையே இடையே விழுகின்றன. சின்னஞ் சிறு தூற்றலாகத் தூவும் மழைத் துளிகளோடு கொஞ்சிக் காட்டுப் பூக்களின் மணத்தை அளைந்து தவழ்கின்றது இளந் தென்றல். அங்கங்கே மயில்கள் தோகைவிரித் தாடும் அந்த அழகையும் அள்ளிக் காட்டுவது போல் காட்டி மிருதுவாக மூச்சு விடுகிறது பிள்ளைத் தென்றல்.

இத்தகைய காட்டு வழிகளில் மயில்போன்ற சீதையும், ராமனும் இளையவனும் செல்லும் காட்சி எவ்வளவு அழகாகவும் இயற்கையாகவும் சித்திரிக்கப் படுகிறது:

வெயில்இள நிலவேபோல்
விரிகதிர் இடைவீசப்
பயில்மரம் நிழல்ஈனப்,
பனிபுரை துளி,மேகப்
புயல்தர, இளமென்கால்
பூஅள விய(து)எய்த,
மயிலினம் நடமாடும்
வழிஇனி யனபோனார்.

[விரிகதிர் — விரிகின்ற கிரணங்கள். பயில் மரம் — (கண்பர்போல்) நெருங்கிப் பொருந்திப் பழகும் மரங்கள். ஈன — தர. பனி புரை துளி — பனித்துளி போன்ற சிறு மழைத் திவலைகள். மேகப்புயல் — மழை தூற்றும் மேகம். இளமென்கால் — மென்மையாக வீசுகின்ற இளந் தென்றற் காற்று. பூ அளவியது எய்த — பூக்களோடு கொஞ்சிக் குலாவி வீச. மயிலினம் — மயில்-கூட்டம். நடமாடும் — நடனம் ஆடும்.]

வழிமேல் வைத்த விழிகள் பார்த்துக் கொண்டே யிருக்கின்றன. கடைசியாக, யந்திரம் போல் சேரி திரும்பியும், அகவிழி அப்படியே தான் விழித்துக் கொண்டிருக்கிறது!

ஸ்ரீமத் ராமாயணம்

பி. ஸ்ரீ.

184. சேரியிலே சித்திரகூடம்!

காட்டு வழிகளில் ராமன் சீதையுடன் உல்லாசமாக உரையாடிக் கொண்டே போக, லட்சுமணன் புத்திசாலித்தனமாகப் பின் தங்கிப் பின் தங்கிச் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருக்கிறான். சீதைக்குக் காட்டும் போது அந்த இயற்கை யழகுகள், எவ்வளவோ அதிக இனிமை, அதிசய இனிமை, வாய்ந்தனவாகக் காண்கின்றன! அழகுக்கு அழகு செய்த சீதையின் ரூப சௌந்தரியத்தோடு, காட்டிலும் தன்னைத் தொடர்ந்து வந்த அந்தக் குண சௌந்தரியத்தையும் பாராட்டுவது போல்,

அருந்ததி அனையாளே!
அமுதினும் இனியாளே!

என்று கொஞ்சி அழைத்து, வழியிலுள்ள காட்சிகளை யெல்லாம் காட்டிக் கொண்டு போகிறான் ராமன்.

திரிவேணி சங்கமம்

இந்த அழகுகளுடன் சூரியாஸ்தமன அழகும் சேர்ந்துகொண்ட போது, சித்திரகூட மலை தூரத்தில் கண்ணுக்குத் தோன்றியது, மங்கலான ஒரு சித்திரம்போலே. அப்போது ஒரு பெரியவர் அங்கே வந்தார். ராமன் வருவதைத் தெரிந்து எதிர்கொள்ளத்தான் வந்தார், ஒரு மரகத மலையை ஞான மலை எதிர்கொள்வது போல். ராமனும் தம்மைப் போல் அரையில் மரவுரியும் ஜடை முடியுமாக இருப்பது கண்டு திகைத்து, 'இக் கோலத்திலா தசரத ராஜ குமாரனைக் காண்பது?' என்று சோகக் கண்ணீர் சொரிந்தார். வந்த காரணத்தை ராமன் தெரிவிக்க, முனிவர், 'உன்னைக் காட்டுக்கு அனுப்பி விட்டு எனது நண்பனாகிய சக்ரவர்த்தி எப்படித்தான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறானோ?' என்று வருந்தினர். (இவர் இப்போது ஞான திருஷ்டியால் அந்த நண்பனை மட்டும் பார்த்திருந்தால்?) பிறகு, தமது ஆச்ரமத்திற்கு இவர்களை

இட்டுக்கொண்டு போய், காய் கனி வகைகளை உணவாகக் கொடுத்து உபசரித்தார். அம் முனிவரைக் கண்டதும் ராமனுக்குத் தந்தையைக் கண்ணுற்றது போல் இருந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்த பின் முனிவர், 'இந்த இடம், கங்கை யமுனை சரஸ்வதி என்னும் மூன்று நதிகள் சேருகின்ற பிரயாகை; "திரிவேணி சங்கமம்" ஆகிய இந்த க்ஷேத்திரம் வசிக்கச் சௌகரியமானது' என்றார். ஆனால் இது கோசல நாட்டுக்குச் சமீபத்தில் இருந்ததால் ராமன் இங்கே வசிக்க இஷ்டப்படவில்லை. முனிவனை வணங்கி விடை பெற்று ராமன் முதலானோர் சித்திரகூடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

சித்திரகூட யாத்திரை

உச்சிவேளையில் ராமன் முதலியோர், ஒரு நதியிலே மான்குட்டிகள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்ததைக் கண்ணுற்றார்கள்;

கொன்றை வேய்ங்குழல் - கோவலர்
முல்லையங் குறிஞ்சி
சென்று, செங்கதிர்ச் செல்வனும்
நடுவுறச், சிறுமான்
கன்று நீர் நுகர் காளிந்தி
எனும்நதி கண்டார்.

[கொன்றை வேய்ங்குழல் — கொன்றைப் பழத்தைத் துருவித் தொளையிட்டும், மூங்கிலிலிருந்தும், செய்த குழல்கள். கோவலர் — இடையர்கள். முல்லை — காடும், காடு சார்ந்ததுமான நிலம், குறிஞ்சி — குன்றும் மலையும் சார்ந்த பிரதேசம். செங்கதிர்ச் செல்வன் — சூரியன். நடுவுற - உச்சியை அடைய. நீர் நுகர் - தண்ணீர் குடிக்கிற. காளிந்தி — யமுனா நதி.]

யமுனா நதிக் கரையில் வரும்போது, ராமன் முதலியோருக்கு வழி நடந்ததால் அழகான மேனியெல்லாம் புழுதி படிந்து நீறுபூசியது போல் இருந்ததாம். அவர்கள் அந்தக் குளிர்ந்த நீர்ப்பெருக்கைக் கண்டு அகமகிழ்ந்து நதிமாதாவை வணங்கி ஆனந்தமாக மாத்யான்னிக ஸ்நானம் செய்தார்கள்; அருகே கிடைத்த கனிகிழங்குகளைப் புசித்துப் பசியாறித் தண்ணீர் பருகினார்கள், கரையோரமாக நீர் பருகிக் கொண்டிருந்த அந்த அழகான மான் குட்டிகளைப் பார்த்துக் கொண்டே:

ஆறு கண்டனர், அகமகிழ்ந்(து)
இறைஞ்சினர், அறிந்து,
நீறு தோய்மணி மேனியர்,
நெடும்புனல் படிந்தார்,
ஊறு மென்கனி கிழங்கினோ(டு)
உண்டு, நீர் உண்டார்.

[இறைஞ்சினர் — வணங்கினார்கள்; மணி மேனியர் — அழகான மேனியை உடையவர்கள். நெடும்புனல் படிந்தார் — யமுனையின் நீரோட்டத்திலே முழுகி நீராடியவர்களாய். ஊறு — நாவிலே நீர் ஊறச்செய்யும்.]

பசியும் தாகமும் தீர்ந்தபின், 'இந்நதியைக் கடப்பது எப்படி?' என்று ஆலோசனை செய்தார்கள். ராமனும் சீதையும் அது குறித்துச் சிந்திப்பதற்குள், லட்சுமணன் பளிச்சென்று பக்கத்திலுள்ள மூங்கிற் காட்டுக்குள்

பாய்ந்து சென்று, மூங்கிற் கழிகளை அளவுபட வெட்டி, அவற்றை மாணைக் கொடி என்ற ஒருவகைக் காட்டுக்கொடியால் பிணைத்துத் தெப்பம்போலக் கட்டி ஆற்றிலே மிதக்கவிட்டான். அத்தெப்பத்திலே சீதையுடன் ராமன் சுகமாகத் தங்கியிருக்க, லட்சுமணன் துடுப்புக் கொண்டு தெப்பம் தள்ளுவது போல் இரு கைகளாலும் நீந்தியவண்ணம் தெப்பத்தைத் தள்ளிக்கொண்டு போனான்:

வாங்கு வெய்ங்கழை துணித்தனன்,
    மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன்(று) அமைத்(து)
    உம்பரின், உலம்போல் [அதின்
வீங்கு தோள்அண்ணல் தேவியோ(டு)
    இனிது வீற்றிருப்ப,
நீங்கினன்,அந்த நெடுநதி
    இருகையால் நீந்தி.

[வாங்கு-வளையும் தன்மையுள்ள. வெய்ங் கழை-மூங்கிலின்கழிகள். துணித்தனன்-வெட்டினவனாய், வெட்டிக்கொண்டு. அதின் உம்பரின்- அதன்மேலே. உலம்போல்-திரண்ட கல்லைப்போல்.]



சீதா ராம லட்சுமணர் மூவரும் அக்கரை சேர்ந்து, காட்டிலே நீள் வழி பிடித்துப் போனார்கள். வழியில் ஒரு பிரதேசம் தீய்ந்து கிடந்தது, கடுமையான நீர்ப் பஞ்சத்தால். போகப் போகச் சில இடங்களில் ஏற்கெனவே மழைபெய்து வெந்து கிடந்த நிலம் குளிர்ந்து பச்சைக் கம்பளம் பரப்பி வைத்தாற்போல் புல்லாந் தரையாகக் காட்சி யளித்தது. மயில்கள் கூத்தாடுவதையும், வண்டுகள் ரீங்காரம் செய்வதையும் கண்ணுற்ற இவர்களுக்கு, கம்பளம் பரப்பிய ஒரு சபையில் நடன மாதர் நடனம் செய்யப் பாணர்கள் பாடுவது போலத் தோன்றியது :

படர்ந்தெ ழுந்தபுல் பசுநிறக்
கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன ; கேகயம்
தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம்
வயின்தொறும் நவின்ற,
தொடர்ந்த பாணரின் பாங்கிசை
முரன்றன தும்பி.

[கேகயம் — மயில்கள். கிளர — விரிந்து நிற்க. மடந்தையரென— பெண்கள் போல. நாடகம் — (இங்கே) நடனம். வயின் தொறும்—அந்த அந்த இடங்களில். நவின்ற— (இங்கே) செய்தன. தொடர்ந்த பாணரின் —நடனத்தைத் தொடர்ந்து அதற்கிசையப் பாடுகின்ற பாடகர்போல். பாங்கு இசை — பக்கங்களிலே இனிய பாடல்கள். தும்பி — வண்டு.]

எதிர்பாராத மழையின் பயனாகச் சில கனிகள் அகாலத்திலே கனிந்திருந்தன. அங்கங்கே கிழங்குகளும் கிடைத்தன, 'வேரில்லாமலே கிடைத்து விட்டனவோ ?' என்று பிரமிக்கும்படி. பூஞ்செடிகளும் கொடிகளும் பூமரக் கிளைகளும் அலங்கரிக்கப்பெற்ற மங்கையர் போல், வனமோகினிகள் போல், காட்சியளித்தன.

அந்தத் 'தோழி'களைக் கண்டதும் மகிழ்ந்து போனாள் ஜானகி. 'எல்லாம் ஜானகியின் பாக்கியம் தான், அவள் செய்த தவம் தான் ?' என்று தோன்றுகிறது ராமனுக்கு. ஆமாம், அதனால்தான் பாலைவனமும் சோலைவனமாய்க் காண்கிறது !' என்று சொல்லத் தோன்றுகிறது கவிஞனுக்கும்:

காலம் இன்றியும் கனிந்தன
கனி;நெடுங் கந்தம்
மூலம் இன்றியும் முகிழ்த்தன,
நிலனுற முழுதும்
கோலமங்கையர் ஒத்தன
கொம்பர்கள் ! இன்பச்
சீலம் அன்றியும் செய்தவம்
வேறும்ஒன்(று) உளதோ?

[நெடுங்கந்தம்-பெரிய கிழங்குகள். மூலம் - வேர். முகிழ்த்தன-தோன்றின. நிலன் உறமுழுதும் — அந்நிலத்தில் முழுதும். கோல மங்கையர் ஆடையாபரணங்களால் கோலம் செய்து கொண்ட பெண்கள். கொம்பர் — பூஞ்செடிகளும், பூங்கிளைகளும்.]

சீதை செய்த தவம் இவளுடைய இன்ப மயமான சீலம் தான், ஒழுக்கம்தான் : எந்த முனிவரின் எந்தக் கடுந்தவம் இதற்கு ஈடாகும்

இவர்கள் இப்படிச் சித்திரகூடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்க, குகனுள்ளமும் சித்திரகூட யாத்திரை செய்த வண்ணமா யிருந்தது, சேரியில் இருந்தபடியே.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

185. மலையிலே உதய அஸ்தமனங்கள்

ஒரு கருமேகம். மலைச் சிகரத்தில் தோன்றுகிறது, பொழுது புலரச் சிறிது நேரத்திற்கு முன். அந்த மேகத்திற்குள் மறைந்துவிடுகிறது பிறைச் சந்திரன். இப்போது அம் மேகம் யானை போலக் காண்கிறது, – தந்தமில்லாத பெண் யானை போலே. லேசாகக் கேட்கிறது இடிச் சத்தம், அந்த யானை வீரிடுவது போலே. அம் மலைப் பக்கத்திலே ஒரு யானை – எதார்த்த யானை தான்—தும்பிக்கையை நீட்டுகிறதாம் அம் மேகத்தை நோக்கி. 'அது பெண் யானை தான்!' என்று இந்தக் கொம்பன்-யானை எண்ணிவிட்டது போலத் தோன்றுகிறது, அந்தச் சாரலில் நடந்து வரும் சீதா ராம லட்சுமணர்களுக்கு. அப்போது தான் இவர்கள், தங்கள் மனமெனக் குளிர்ந்து, சீதையின் இன்பச் சீலமாகிய தவமெனத் தழைத்துச் சோலைவனமாகிவிட்ட பாலைவனத்தைத் தாண்டிச் சித்திரகூடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சித்திரகூடத்தில் சீதையின் சிததிரம

மேலே சொன்ன சித்திரகூட மலைச் சிகரத்தைக் கண்டார்கள். சூரியோதயமானதும், அம் மலையின் பல வகை இயற்கை வளங்களையும் ராமன் சீதைக்குக் காட்டத் தொடங்கினான்.

அந்த அழகுகளைக் காட்டும்போதே ராமன் சீதையை,

> சீலம் இன்னதென்(று) அருந்ததிக்(கு)
> அருளிய திருவே!

என்று வாய் குளிர அழைக்கிறான். சீலம் என்பது சீதை இட்ட பிச்சை தானும், அருந்ததி தேவிக்கும்.

சீலத்திற்கு ஏற்ற அழகும் அமைந்திருக்கிறது சீதாதேவிக்கு:

> ஆடு கின்றமா மயிலினும்
> அழகிய குயிலே!

[மயிலினும் — அழகில் சிறந்த மயிலைக் காட்டிலும். குயிலே—குயில் போன்ற இனிய குரலை உடையவளே.]

ஒருவில் பெண்மையென்(று) உரைக்கின்ற
உடலினுக்(கு) உயிரே !

[ஒருவில் — நீங்குதல் இல்லாத.]

என்றெல்லாம், கொஞ்சிக் கொஞ்சி அழைப்பதைக் கேளுங்கள்.

சித்திரகூடத்தின் அழகுகளெல்லாம் சீதையின் குண சித்திரத்தையும் ரூப சித்திரத்தையும் தூக்கிக் காட்டுகின்றன, காதலன் கண்களில் !

பெண்மை என்று சொல்லுகிறோமே, அந்த உடலுக்கு உயிர் என்பதே சீதைதானும். இப்படி யெல்லாம் சீதையின் குண அழகையும் உருவ அழகையும் வியந்து பாராட்டும் ராமன், இவளுடைய சாரீர சம்பத்திலும் ஈடுபட்டு, 'குயிலே!' என்று கொஞ்சியதோடு திருப்தியடையாமல்,

தண்தமிழ் யாழினும்
இனியசொற் கிளியே !

[தண் தமிழ் யாழ் — குளிர்ந்த தமிழின் இனிமை வாய்ந்த வீணை போன்ற ஓர் இசைக் கருவி. சொற்கிளி — சொற்களைச் சுகமாக, 'மழலை மென் மொழி'யாக உச்சரிக்கும் கிளிப் பிள்ளை.]

என்று அழைக்கிறான்.

அஸ்தமன சமயம்

இப்படிப் பொழுது போக்கிக் கொண்டே பகலெல்லாம் சுற்றித் திரிந்து காடும் மேடும் சோலைகளும் கண்டு களித்த பின், சீதா ராம லட்சுமணர்கள் ஒரு வாய்ப்பான இடத்தில் வந்து தங்குகிறார்கள். நாலு புறமும் மலைச் சிகரங்கள், காடு அடர்ந்த பிரதேசங்கள், செங்குத்தான பாறைகள், பள்ளத் தாக்குகள், அங்கங்கே தடாகங்கள்.

சூரியன் அஸ்தமிக்கும் சமயம். கிழக்குத் திக்கில் நின்ற சிகரத்தின் உச்சியிலிருந்து உதித்து வந்த சூரியன், மேற்குத் திக்கில் நின்ற சிகரத்தின் உச்சியை உரசி நிற்பதுபோலக் காண்கிறது.

நீலக் கரு நிறம் வாய்ந்த நெடுமால் போலக் காட்சி யளித்தது, காலை வேளையில் கிழக்கு மலைச் சிகரம். அச்சிகரத்தி லிருந்து நெருப்புப் பந்து போல் புறப்பட்ட பால சூரியன், சக்ராயுதம்போல் தகதகவென்று திகழ்ந்து, வான முகட்டில் ஏறிப் பாய்ந்து, மேற்கே நின்ற மொட்டைச் சிகரத்தை ஒட்டி உரசிப்போய் அப்பால் நிற்கிறது. இக்காட்சி திருமால் ஏவிய சக்ராயுதம் ஓர் அசுரன் தலையைத் தாக்கி வெட்டித் தள்ளி விட்டது போலத் தோன்றுகிறதாம்.

அஸ்தமன சித்திரம்

மலைபோலிருந்த காலநேமி என்ற அசுரன் மீது திருமால் சக்ரத்தைப் பிரயோகித்துத் தலையை அறுத்த கதை புராணப் பிரசித்தமாக எல்லோருக்கும் தெரியும், கம்பன் காலத்திலே. இதை மனசில் வைத்துக் கொண்டு பாருங்கள், சித்திரகூட மலையில் சூரியாஸ்தமன சித்திரத்தை :

மாவியல் உதயமாம்
துளப வானவன்,
மேவிய பகைஇருள்
அவுணர் விந்துகக்,
காவியல் குடவரைக்
கால நேமிமேல்
ஏவிய திகிரிபோல்
இரவி ஏகினன்.



[மா—பெருமை. மாஇயல்—கம்பீரமாய்த் தோன்றும். உதயமாம் துளப வானவன்—உதய கிரியாகிய நெடுமால். துளப வானவன்—துளசிமாலை அணிந்த கடவுள். மேவிய பகை இருள் அவுணர் — எதிர்த்து வந்த பகையாகிய இருள் என்னும் அரக்கர் கூட்டம். வீந்து உக—தொலைந்து போக. கா இயல்—காட்டுச் சோலைகள் பொருந்திய. குடவரைக் கால நேமி—மேற்கு மலைச் சிகரமான கால நேமி என்ற அசுரர் தலைவன். ஏவிய திகிரிபோல்—ஏவி விட்ட சக்ராயுதம் போல். இரவி ஏகினன்—சூரியன் போய் விழுந்தான்.]

மலைகளுக்கிடையே சூரியாஸ்தமனம் பார்த்திருப்பவர்களுக்கு, 'எவ்வளவு பொருத்தமான உபமானம்! என்ன இசைவான கற்பனை!' என்று தோன்றும்.

சக்கரம் அசுரன் தலையில் தாக்கியதும், புறப்பட்டது இரத்த வெள்ளம்,— மேல்வான மெங்கும் கொட்டி மெழுகியது போலக் காண்கிறது. 'அதுதான் செவ்வானம்' என்று கவிஞன் காட்டுகிறான், குழந்தைக்குக் குழந்தை காட்டுவது போலே:

சக்கரம் தானவன்
தலையில் தாக்குற,

எக்கிய சோரியில்,
பரந்த(து) எங்கணும்
செக்கர்,—அத் தீயவன்
வாயில் தீர்ந்து,வே(று)
உக்கவான் தனிஎயி(று)
ஒத்த(து) இந்துவே!

[தானவன் — அசுரனான காலநேமி. எக்கிய சோரி — பொங்கி வந்த இரத்தம். எங்கணும் — எங்கும். செக்கர் — செவ்வானம். அத்தீயவன் — அந்தக் கொடியவனான அசுரன். வாயில் தீர்ந்து — வாயை விட்டு நீங்கி. வேறு உக்க — வேறாகத் தெறித்து விழுந்த. வான் தனி எயிறு — பெரியதொரு வக்கிர தந்தம்; பெரிய ஒற்றைக் கோரப் பல். இந்து — பிறைச் சந்திரன்.]

சூரியன் மறைந்ததும், இரத்தம்போலச் சிவந்து விரிந்து கிடக்கும் செவ்வானமும், அவ்வானத்திலே தோன்றும் பிறைச் சந்திரனும், தனிமை சூழ்ந்த மலைக் காட்டில் எப்படித் தோன்றும் என்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல் இருக்கிறது இச் செய்யுள்.

நிசப்தமான அந்தி வேளையில் செவ்வானத்தை நோக்கும்போது, ‘இயற்கைக்குத் தான் என்ன சீற்றம்!’ என்று அதிசயிக்கிறோம். அந்த வானச் சிவப்பு,— அந்த இரத்தச் சிவப்பு, எங்கேயோ கண்ணுக்குத் தெரியாமல் கிடக்கும் ராட்சஸ உடம்பிலிருந்து பொங்கிப் பெருகும் இரத்த வெள்ளம் போலக் காண்கிறது. இதைத் தான், உதயகிரியாகிய நெடுமால் கிழக்கேயிருந்து தகதக வென்று ஜொலிக்கும் தமது சக்கரத்தை மேற்கேயிருந்த கால நேமியின் தலையைக் குறிவைத்து வீசி அடித்ததும் ‘சோ’ வென்று பாயும் அந்த இரத்த வெள்ளமாகக் காட்டுகிறான் கவிஞன்.

பிறைச் சந்திரன்

இப்போது நாம் அவ்வானத்திலே தோன்றும் பிறைச் சந்திரனைச் சுட்டிக் காட்டி, ‘அது எப்படி ஐயா வந்தது அந்த இரத்த வெள்ளத்திலே?’ என்று குறும்பாகக் கேட்கிறோம். கவிஞன் பளிச்சென்று, ‘அந்தக் கால நேமியின் தலையில் சக்கரம் தாக்கியதல்லவா?’ என்று கதையைத் தொடர்ந்து, ‘அப்பொழுது அந்தத் தீயவனது வாயிலிருந்து தெறித்து ஒரு பெரிய கோணற்பல் தனியாக விழுந்தது. அந்த ஒற்றைப் பல் தான் ஐயா! பிறைச் சந்திரன்!’ என்று கதையை முடிக்கிறான். என்ன கதை, என்ன சூரியாஸ்தமனம்!

இந்தப் பாட்டைப் பாடிப் பாடி இதில் வரும் வல்லோசைகளையும் கவனிக்க வேண்டும். பொருளோடு எப்படி ஒட்டி ஒலிக்கின்றன, பாருங்கள்!

சக்கரம் தானவன்
தலையில் தாக்குற

என்ற வாய் நிறைந்த வல்லோசையைக் கேளுங்கள். ஆம், மானஸீகமாய்க் கேட்டுப் பாருங்கள், ‘ஏன் இந்தக் கோபம்?’ என்று. ‘அத்தீயவன்’ என்று காலநேமியை ஆங்காரமாய்க் குறிக்கும் கோபத் தீயையும் பாருங்கள்.

மேற்கே வானத்தில் இவ்வளவு கோபாவேசம் காட்டும் இயற்கை, அந்த மலைச் சாரலில் எவ்வளவு சாந்த மயமாகக் காட்சி வழங்குகிறது!

சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ.

186. அந்தி தந்த கவிதை

அந்திவேளையின் சாந்தமும் மோகன சக்தியும் அப்படியே விழுங்கு கின்றன, மலையையும் காட்டையும், பள்ளத்தாக்கையும் பாறைகளையும். முதல் முதல் மலைக் காட்டையும் அக் காட்டு மரங்களையும் பார்த்து நிற்கிறான் ராமன். பிறகு பள்ளத்தாக்கிலே இயற்கையாகத் தடாகம்போல் அமைந்திருக்கும் ஒரு நீர்நிலையை நோக்குகிறான். அப்பால் செங்குத்தான மலைப் பாறைகளையும் வான வீதியையும் நோக்குகிறான்.

அந்தி — நாடகம்

அங்கங்கே என்ன காண்கிறான்? அந்தக் காட்சிகள் உள்ளத்தை எப்படி வசீகரிக்கின்றன?

மந்தியும் கடுவனும்
மரங்கள் நோக்கின ;
தந்தியும் பிடிகளும்
தடங்கள் நோக்கின ;
நிந்தையில் சகுந்தங்கள்
நீளம் நோக்கின :
அந்தியை நோக்கினன்,
அறிவை நோக்கினான்.

[மந்தி - பெண் குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. தந்தி - ஆண் யானை. பிடி - பெண் யானை. தடங்கள் - தடாகங்கள். நிந்தையில் - குற்றமற்ற அழகுவாய்ந்த. சகுந்தம் - சகுந்தப் பறவை. நீளம் - கூடு.]

மாலைக் காலத்திலே பெண் குரங்குகள் இரவில் தங்குவதற்கு வசதியான மரங்களை நோக்கி மேலே போகின்றன. மந்திகளின் 'காதலர்'க

னான ஆண் குரங்குகள் தங்கள் 'காதலி'களைப் பின் தொடர்கின்றன. இக்காட்சியை மலைக் காட்டில் காண்கிறான் ராமன்.

பள்ளத்தாக்கில் வேறொரு காட்சி. பகலில் காட்டிலே அலைந்து திரிந்த யானைகள் தாகத்திற்குத் தண்ணீர் குடிக்க நீர்நிலைகளை நோக்கிச் செல்லுகின்றன. பெண் யானைகளுக்கு ஆண் யானைகள் வழிகாட்டி முன்னே செல்கின்றன. வசதியான மரங்களில் காதலிகளைப் பின் தொடரும் 'குரங்குக் காதலர்'களைப் பார்க்கிறான் ராமன். யானைமேல் அம்பு போடும் வேட்டைக்காரர்கள் மறைந்து நிற்கக் கூடிய அபாயகரமான நீர்நிலைகளுக்கருகே காதலர்களைத் தொடர்ந்து போகும் 'யானைக் காதலி'களைப் பார்க்கிறான்.

இனி ராமனது கவனம் செங்குத்தான மலையுச்சிகளையும் பாறைகளையும் நோக்குகிறது. அங்கே கூடுகட்டியிருக்கும் சகுந்த பட்சிகள் பகலில் பல இடங்களிலும் திரிந்தபின் தங்கள் கூடுகளை நோக்கிச் சிறகுகளை விரித்து அழகாய்ப் பறந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய காட்சி யின்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ராமன் இப்பொழுது சீதையைக்கூடக் கவனிக்கவில்லை. 'ஆஹா, இந்த



அந்தி, "மந்தி"களையும் "கடுவன்"களையும் கூட அழகு-மூலாம் பூசிக் காட்டுகின்றன!' என்று, அந்திமாலை காட்டும் இந்திர ஜாலங்களில் ஈடுபடுகின்றன கண்கள். மனக்கண்ணோ இத்தகைய இயற்கைக்கு அடிப்படையாகவுள்ள 'அறிவுத்திறமை'யை வியந்து நோக்குகிறது. ஆம்; எத்தகைய பேரறிவு இப்படித் திட்டம் போட்டுத் திரைக்குப் பின் இருந்து இந்த நாடகத்தை நடத்தி வைக்கிறது!' என்று அந்த அறிவை நோக்குகிறானும் அந்தியை நோக்கிய ராமன்.

பகற் பூக்களும் இராப் பூக்களும்

இவ்விதமாக மாலைக்காலத்தை வர்ணிக்கும் கம்ப சித்திரம் படிப் படியாக வளர்கிறது. அந்தி வானத்தையும், காடு பள்ளத்தாக்கு பாறை முதலியவற்றோடு கூடிய மலையையும் ஒருங்கே சித்திரித்துக் காட்டும் கவிஞன், தன் சித்திரத்திலே அழகில் சிறந்த மலர்களுக்கும் தக்க இடம் அளிக்க விரும்புகிறான்:

மொய்யுறு நறுமலர்
முகிழ்த்த வாம்சில;
மையறு நறுமலர்
மலர்ந்த வாம்சில.

[மொய்யுறு நறு மலர் - கூட்டமாகப் பூத்திருக்கும் (நிறபேதமுள்ள) பூக்கள். முகிழ்த்தவாம் — மூடிக் கொண்டன. மை — கருநிறம்; (இங்கே பொதுவாக நிறம். மையறு — நிறபேதங்கள் அற்ற.]



நிறபேதங்கள் உள்ள தாமரை போன்ற பகற் பூக்கள் அங்கங்கே கூம்பிக் குவியக் காண்கிறான் ராமன். பக்கத்திலே இராப் பூக்களான வெண்ணிற மலர்கள் அங்கங்கே மலர்வதையும் பார்க்கிறான். (கவிஞன் 'பூக்களின் விஞ்ஞானம்' தெரிந்த புலவனாகவும் காண்கிறான் அல்லவா? அகக் கண்ணாகிய கற்பனைக் கண் திறந்து உண்மை காண்பது போல், புறக் கண் விரிந்து இயற்கையை உற்றுப் பார்த்து இத்தகைய விஷயங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறது.)

மிருகங்களையும், பறவைகளையும் பார்த்து அந்தியின் அமைதியையும் மோகனத்தையும் அனுபவித்த போதிலும், சலனம் இல்லாத சாந்தி பரிமளிக்கும் அழகைப் பூக்களிலே காண்கிறான் ராமன். இந்தச் சாந்தியையும் வசீகர அழகையும் உணர்ந்து கொள்ளும்போது,

இயற்கைத் திரைக்குப் பின் இருந்து உலகத்தை யெல்லாம் ஆட்டி வைக்கும் சுத்த அறிவு இன்னும் சூட்சுமமாய்ப் புலனாகிறது.

குவிந்த கமலங்கள்

இத்தகைய காட்சிகளுக்கிடையே, குவிந்தும் விரிந்தும் காணும் பூக்களுக்கிடையே அழகனான ராமனைப் பார்க்கிறோம்; ராமனோடு இளையவனையும் பார்க்கிறோம். இந்த அழகுக் காட்சிகளுக் கெல்லாம் ஒரு புதிய அழகு தருவது போல நின்று கொண்டிருக்கும் சீதையையும் பார்க்கிறோம். இவர்கள் இக்காட்சிகளைப் பார்த்ததும், என்ன நிலை அடைகிறார்கள்?

ஐயனோ(டு) இளவற்கும்
அமிழ்த னாளுக்கும்,
கைகளும் கண்களும்
கமலம் போன்றவே!

[ஐயன் — ராமன். இளவல் — தம்பி. அமிழ்த்து அனாள் — அமிர்தம் போன்ற சீதை. கமலம் — தாமரைப் பூ.]

அந்தி நேரம் ஆக ஆக, இரத்தக் களமாக இருந்த செவ்வானம் கொஞ்சங் கொஞ்சமாக மங்குகிறது. அமைதி அதிகரிக்கிறது. அந்த அமைதியில் — சாந்தியில் — ஆழ்ந்து கொண்டிருக்கும் ராமன், எல்லாவற்றுக்கும் அடிப்படையான பரம சாந்த அறிவை நோக்கி ஆனந்தித்துக் கொண்டிருக்கிறான்; ஆனந்திக்கும் போதே பக்தி யுணர்வு நிறைந்து பரிமளிக்கிறது. இத்தகைய உணர்வு, அருகேயுள்ள லட்சுமணனையும் தொத்திக் கொள்கிறது; சீதை யுள்ளத்திலும் ஆவேசிக்கிறது.

இப்படிச் சாந்தியில் ஆழ்ந்து மூவரும் பக்திபாவசம் ஆகும்போது, கைகளும் கண்களும் ஒருங்கே குவிந்து விடுகின்றன. எப்பொழுதும் கமலம்போல் இருக்கும் அக் கைகளும் கண்களும் அந்த மாலை வேளையிலும் கமலம் போல் குவிந்து கொள்கின்றனவாம்.

இந்தப் பாட்டை உள்ளபடி அனுபவிக்கும்போது, சாந்தி பரிமளிக்கும் பக்திநிலை நமக்கும் சித்திக்கிறது. ஆம், ராமனுடைய பக்தி யுணர்வு அருகே யிருந்த சீதையையும் லட்சுமணனையும் தொத்திக் கொண்டது போல், நம்மையும் தொத்திக் கொள்கிறது: என்ன அதிசயம்! மகாகவி நிகழ்த்தும் அற்புதம் இது.

• • • •

மலைச் சாரலில் எத்தனையோ மாலைக் காலங்களைக் கவிஞன் நோக்கி இன்புற்றிருக்கலாம்; இதன் பயனாக இந்தக் கம்பசித்திரம் பிறந்திருக்க வேண்டும். அழகு சுமந்து வரும் அந்தி மாலையே இத்தகைய சித்திரத்தைக் கவிஞன் கையில் கொணர்ந்து தந்திருக்கவேண்டும். இந்த அந்தி மாலைப் பாடல்களை 'அந்தி தரு சித்திரம்' என்றார் ஒரு ரஸிகர். கம்பராமாயணம் என்ற சித்திர சாலையில் வசீகர அழகு வாய்ந்த சித்திரங்களில் இதுவும் ஒன்று.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

187. இச் செல்வத்திற்கு உண்டோ சிதைவு?

அந்தி மயங்கி விட்டது. ஏதாவதொரு ஜாகையில் போய்த் தங்க வேண்டாமா? 'ஜாகை தயார்' என்று தம்பி சொன்னதும் எல்லாரும் பர்ணசாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தப் பர்ணசாலையை லட்சுமணன் எப்படித் தயாராக்கிவிட்டான்?

லட்சுமணன் கட்டிய மாளிகை

நீண்ட மூங்கில்களை வெட்டிக் கொணர்ந்து தூண்களாக வரிசைப் படுத்தி நிறுத்தினான். மேல் மட்டம் பார்த்து அம்மூங்கில்-தூண்கள்மீது உத்தரம் வைத்தான். மூக்குச் சட்டங்களை இறக்கிக் கைகளும் குறுக்கு வரிச்சுகளும் வைத்து, வரிச்சுகளுக்கு மேல் வெள்ளிபோல் பள பளப்பான தேக்கிலைகளைப் பரப்பிப் புல்லை வேய்ந்துவிட்டான். பிறகு கட்டுவைத்த தூண்களுக்கிடையே கழிகளை அடைசுவராக நெருக்கி அமைத்து, அவற்றின் மேல் களி மண்ணை உள்ளும் புறமும் அப்பித் தண்ணீர் தெளித்துத் தீற்றி ஒழுங்காக்கினான். இப்படி அண்ணனுக்கு இடம் அமைத்து வைத்தான்.

இதை ஒட்டிச் சீதைக்கு ஒரு தனி இடம். கொஞ்சம் அதிகமாய்ச் சிங்காரித்தான். சுவர்மீது செம்மண் கொண்டு பட்டை அடித்து அழகு செய்தான். பல நிறக் கற்களையும் சிப்பிகளையும் சிறிது தூரத்திலிருந்த நீர்நிலையிலிருந்து பொறுக்கி வந்து, உட்சுவரில் கோலம் போட்டது போலப் பதித்து வைத்தான்.

இப்படி லட்சுமணன் அமைத்திருந்த பர்ணசாலையில் ராமன் சீதையுடன் குடிபுகுந்தான். 'அவதாரமூர்த்தியான ராமன் சீதா லட்சுமியோடு இப்படியும் ஒரு "மாளிகை"யில் குடி புகுந்தானே!' என்று அதிசயமாய் அந்தக் குடியேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

பார்க்குமிடமெல்லாம் சிருஷ்டி-சக்தி நிறைந்து அழகான சிருஷ்டிகளைச் செய்த வண்ணமாய் இருக்கிறதல்லவா? அந்தச் சக்தியின் அகத்தில் விளங்கி உதைத் தொழிற்படுத்தும் உலக ரட்சக சக்தியே மானிடச் சட்டை போர்த்து ராமனாக வந்திருக்கிறதாம். அதே ஸர்வ ரட்சக சக்தி தான் நம் உயிர்க்குள்ளும் ஒளிர்கின்றது; படைப்புக் கடவுளின் அகத்தில் ஒளிர்வதுபோல் நம் அகத்திலும் ஒளிர்கிறது. இது ஸர்வேசுவரனுடைய ஸமதர்மம். ராமன் இத்தகைய ஸமதர்ம மூர்த்தியானதால், நாட்டிலுள்ள அரண்மனையில் வசதியாகத் தங்கியதுபோல் இந்த மலைக் காட்டில் லட்சமணன் அமைத்த அன்புக் குடிசையிலும் மனமுவந்து குடியேறுகிறானும்.

எட்படிப் படித்தானோ?

இது கவிஞனுடைய பக்தியுள்ளம்தான். ராமனோ தன் மானுடக் கோலத்திற்கு இணங்கச் சாதாரண மனித உணர்ச்சிகளுடன் பார்க்கிறான், தான் குடிபுகுந்த பர்ணசாலையை.

தம்பி எப்படி இந்தக் குடிசையைக் கட்டி முடித்து விட்டான்? எப்போது இந்த வித்தையைக் கற்றுக் கொண்டானோ? வில்லைப் பிடித்த கை கொத்து வேலை செய்து குடிசை கட்டிவிட்டதே! இது இருக்கட்டும்: ஜனக குல சுந்தரியான சீதை, பூவைக் காட்டிலும் மென்மையான தன் பாதங்களால் இந்தக் காடு மேடுகளிலே எப்படி நடந்து வந்தாள்? இக்கேள்விகள் ராமன் உள்ளத்தில் எழுகின்றன.

இக் கேள்விகளுக் கெல்லாம் ஒரே விடைதான் இருக்க வேண்டும். தரித்திரம் நன்றே இவர்களுக்கு ஆசிரியனாக அமைந்து கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்:

> மேவு கானம்
>   மிதிலையர் கோன்மகள்
> பூவின் மெல்லிய
>   பாதமும் போந்தன!
> தாவில் எம்பிகை
>   சாலை சமைத்தன!
> யாவை, யாதும்
>   இலார்க்(கு)இயை யாதவே?

[மேவ கானம் — (அடைய வேண்டும் என்று) நேர்ந்த காடு. கானம் — (இங்கே) காட்டு வழி. மிதிலையர்கோன் மகள் — ஜனக குல சுந்தரி. போந்தன — நடந்தன. தாவில் — ஒப்பற்ற. எம்பி — என தம்பியாகிய லட்சமணன். யாவை — எவை. யாதும் இலார்க்கு — யாதொரு பொருளும் இல்லாத ஆண்டிகளுக்கு. இயையாத — இசையாதன.]


முதல் முதல் பர்ணசாலையைப் பார்த்ததும், தனக்கு ஓர் இடமும் சீதைக்குத் தனியாக ஒரு சிங்கார அறையும் அமைத்து வைத்த தம்பியின் புதுக் கர்மையை நோக்கியதும். ராமன் அகத்தில் குடி புகுந்தது ஆனந்தம்தான். 'என்னை விடப் பாக்கியசாலி இவ்வுலகத்தில் யார் இருக்க முடியும்?' என்ற எக்களிப்பே முதல் முதல் ஏற்பட்டது. உடனே, 'எங்களை விட ஆண்டிகள் யார்?' என்ற எண்ணமும் தொடர்ந்து வந்து விட்டது. தன் கஷ்டத்தைப் பொருட்படுத்தவே யில்லை ராமன். ஆனால் 'ஜானகியை இப்படிக் காட்டு வழியெல்லாம் அலைக் கழிக்க நேர்ந்ததே!' என்ற நினைவு எக்களிப்பை எக்கமாக்கி யிருக்க வேண்டும். மேலும்,

'தம்பிக்குத்தான் என்ன சிரமம், இப்படியெல்லாம் குடிசை கட்டுவதில்!' என்ற வருத்தமும் மகிழ்ச்சியைக் குலைத்திருக்க வேண்டும். இந்நிலையில்தான், 'வறுமையின் அடிமைகள் செய்யாத தொழிலும் உண்டோ? அவர்கள் எப்படியாவது கற்றுக் கொண்டு ஆக வேண்டுமே!' என்ற துயரம் கலந்த உணர்ச்சி தோன்றுகிறது.

சிறிது நேரம் கழித்து ராமன் இளையவனைப் பார்த்துப் பேசுகிறான்:

என்று சிந்தித்(து),
இளையவற் பார்த்(து), 'இரு
குன்று போலக்
குவவிய தோளினாய்!
என்று கற்றனை
நீ இது போல்?' என்றான், —
துன்று தாமரைக்
கண்பனி சோர்கின்றான்.

[இளையவற் பார்த்து — இளையவனைப் பார்த்து. இரு குன்றுகள் போல் திரண்ட தோளையுடைய லட்சுமணனே. துன்று தாமரைக் கண் — முதிர்ந்த தாமரை போன்ற கண்கள். பனி சோர்கின்றான் — பனித் துளிகள் போல் கண்ணீர்த் துளிகள் சொரிந்த வண்ணமாய்.]



தம்பியைப் பார்த்தான், விற்பிடித்த அந்த வீரத் தோள்களையும் பார்த்தான். 'தம்பி! நீயும் என்னைப்போல் வில்வித்தை தானே பழகிக் கொண்டிருந்தாய்? இந்தக் கொத்து வேலையை எப்போது, அப்பா! கற்றுக் கொண்டாய்?' என்று கண்ணீர் சொரிந்த வண்ணம் கேட்கிறான்.

'என்று கற்றனை
நீ இது போல்?' என்றான்.
துன்று தாமரைக்
கண்பனி சோர்கின்றான்.

— என்ன அருமையான கவிதை! அபூர்வ எளிமையோடு, இதயத்தை எப்படி உருக்கிவிடுகிறது, பாருங்கள்!

இரண்டு இதய ரத்தினங்கள்

பின்னும் ராமன் லட்சுமணன் முகம் நோக்கி, 'உனக்கு நான் நெடு நாளாகத் துன்பத்தைத் தான் இழைத்துக் கொண்டிருக்கிறேன்! நான் வேறு என்ன புகழைச் சம்பாதித்து விட்டேன்? இது தானா தர்ம பரிபாலனம்,-பிதுர் வாக்கிய பரிபாலனம்?' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு பேசுகிறான்:

'அடரும் செல்வம்
அளித்தவன் ஆணையால்
படரும் நல்லறம்
பாலித்(து), இரவியில்
சுடரும் மெய்ப்புகழ்
சூடினென் என்பதென்?-
இடர்உ னக்(கு)இழைத்
தேன்நெடு நாள்!' என்றான்.

[அடரும் செல்வம் — மிகுதியான அரசுச் செல்வம். அளித்தவன் — பாதுகாத்த தசரத சக்கரவர்த்தி. ஆணை — கட்டளை. படரும் நல்லறம் பாலித்து — படர்ந்து விளங்கும் நல்லறமாகிய சத்தியத்தைப் பரிபாலித்து. இரவியில் சுடரும் — சூரியனைப்போல் பிரகாசிக்கும். என்பதென் — என்பது என்ன; என்று சொல்வதெல்லாம் ஒன்றுமில்லை.]

பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்ததாகவும், சத்தியத்தைக் காப்பாற்றியதாகவும், 'சூரிய குலத்தில் பிறந்தால் போதுமா? சூரியனைப் போல் புகழொளி பரப்பிப் பிரகாசிக்க வேண்டாமா?' என்ற கருத்துடன் புகழ் சூடிக் கொண்டதாகவும் எண்ணுவதெல்லாம் வீணான எண்ணம் — என்கிறான் ராமன். 'தம்பி! உனக்கு நெடுநாளாக இடர் இழைத்தது தான் உண்மை!' என்று ராமன் கூறியதும். லட்சுமணனுடைய நெஞ்சு என்ன பாடுபட்டிருக்கும்!

அண்ணன் இப்படி நொந்து கொள்வது தான் தம்பிக்கு இப்போது இடர் இழைப்பதாக இருக்கிறது. உண்மையில், ராமனுக்குப் பணி செய்வதுதானே லட்சுமணனுக்கு எப்பொழுதும் இன்பம்? — பேரின்பம்?

கடைசியாக ராமன், 'அப்பா லட்சுமணா! ராஜ்யச் செல்வத்திற்கு அழிவுண்டு. ஆனால் இப்போது இந்த மலைக் காட்டில் நாம் அனுபவிக்கிற இயற்கைச் செல்வத்திற்கு என்ன கேடு தான் வரக்கூடும்? இதைக் கவர்ந்து கொள்வோர் இல்லையே!' என்று சொல்லித். தம்பியைத் தேற்றுகிறான்.

'அத்தி தரு சித்திர'த்தை ஒட்டி அமைந்திருக்கும் இந்தக் காட்சி எவ்வளவு உண்மையான வாழ்க்கைத் துணுக்கு! — எவ்வளவு அழகான கவிதைப் பூங்கொத்து!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

188. பரதன் துயரம்

பேரிகை சங்கு முதலிய வாத்தியங்கள் கடல்போல் முழங்க, இரதங்களும் யானைகளும் நெருங்கிச் சூழ, குதிரைகள் அங்குமிங்கும் அம்பு போலப் பாய, மின் வெட்டுவதுபோல் விட்டுவிட்டு வெட்டி வெட்டிப் பிரகாசிக்கும் ஆயுதங்களோடும் ஆபரணங்களோடும் படை வீரர்களும் அரச குமாரர்களும் திரண்டு தொடர, வந்துகொண் டிருக்கிறானே, அந்த அரசிளங் குமரன் யார்? என்ன ஆத்திரம், என்ன பரபரப்பு! எங்கே போகிறார்கள்? இராஜ வாழ்த்து முரசுகளின் முழக்கத்தையும் அடக்கி முழங்க, மல்லர்களின் வீர கர்ஜனைகளோடு துதி பாடகர்களின் தோத்திரப் பாடல்கள் போட்டி போடுகின்றன. அவ்வளவு உத்ஸாகம் தம்பிக்கு அண்ணனைப் பார்க்கப் போவதில்.

எக்களிப்பும் ஏமாற்றமும்

ராமன் சீதையோடும் லட்சுமணனோடும் சித்திரகூட மலைப் பர்ண சாலையில் தங்கியிருக்கிறான். அவர்கள் நாடு துறந்து செல்லும்போது பரதன் கேகய நாட்டுக்குப் போயிருந்தான். அயோத்தியில் நடந்ததும் அவனுக்குத் தெரியாது; சித்திர கூடத்தில் நடப்பதும் தெரியாது. இப்போதுதான் கேகய நாட்டிலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கிறான்.

பொழுதும் நாளும்
குறித்திலன், போயினான்

என்று, கவிஞன் அந்த அவசர யாத்திரையைக் குறிப்பிடுகிறான். நாள் நட்சத்திரம் ஒன்றும் பாராமல் அப்படியே புறப்பட்டு விட்டானும், ராமனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால். வயது முதிர்ந்த தந்தையைத் தொழ வேண்டும் என்ற விருப்பங்கூட அடுத்தபடியாகத்தான்.

இவ்வளவு உத்ஸாகமாக வந்தவன், கோசல நாட்டில் அடியெடுத்து வைத்ததும் திடுக்கிட்டுப் போகிறான். இந்த நாட்டின் வளம்தான் கொஞ்சமோ? வனப்பைத்தான் என்னென்பது? பிரிந்து போய்த் திரும்பி வரும் பரதனுக்கு இந்த வளமும் வனப்பும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும்? அதற்கு மாறாக அவனைத் திடுக்கிடச்செய்த அந்த நிலைமைதான் என்ன?

இத்தனை வயல்களும் ஏர் அடிப்பார் இன்றித் தரிசாய்க் கிடப்பதற்குக் காரணம் என்ன? தண்ணீர் பாய்ச்சாமல் சில வயல்கள் காய்ந்து கொண்டிருப்பதேன்? அறுவடைக் குரிய வயல்களில் நெற்பயிர் தலை சாய்ந்து அடிமுறிந்து கிடப்பதேன்? இன்னும் சில வயல்களில் களை பயிரையே மூடிவிடும்என்று தோன்றுகிறது. பழங்கள் பொறுக்குவோர் இல்லாமல் சிதறி அழிந்து கிடக்கின்றன. பூக்கள் பறிப்பார் இல்லாமல் உதிர்ந்து உலர்ந்து கிடக்கின்றன.

அயோத்தியில் அந்தி வேளையென்றால் தனியான உல்லாசம் தான், அழகு தான்; ஆடலும் பாடலும் தான்! ஆனால் அந்த அயோத்திதானா இது? மலர்



துறந்த கூந்தல், மாலை துறந்த தோள், நகை இழந்த முகம், களை இழந்த மாளிகை, விழா இழந்த வீதி, அழகழிந்த தோற்றம்! பரதன் திக்பிரமை கொண்டான். தயங்கித் தயங்கி நின்று பெருமூச்சுவிடுகிறான் :

நின்று நின்று
நெடி(து) உயிர்த் தானரோ !

[நெடிது உயிர்த்தான் — பெருமூச்செறிந்தான்.]

ஏக்கமும் எக்களிப்பும்

அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தியைக் காணவில்லை. கைகேயி மாளிகைக்குப் போய் வணங்கியதும், அந்த அம்மாள் தன் தந்தை முதலியோரின் க்ஷேமத்தைக் குறித்து ஆவலாக விசாரிக்கிறாள். 'ஆம்' என்று பரதன் சுருங்கக் கூறி விளங்க வைத்து, 'தந்தை எங்கே?' என்று ஆத்திரமாய்க் கேட்கிறான். அம்மாள் அமைதியாக,

'வானகம் எய்தினன் :
வருந்தல் நீ !' என்றாள்.

பெருந் துயரத்துடன் பரதன்,

'தீயெரி செவியில்வைத்
தனைய தீயசொல்
நீ அல(து) உரைசெய
நினைப்ப ரோ ?' என்றான்.

[வைத்தனைய — வைத்தாற் போன்ற.]

பலவிதமாய்ப் பிரலாபித்த பின் பரதன் ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக்கொண்டு தாயை நோக்கி, 'இனி அண்ணனாகிய ராமனைக்கண்டு வணங்கினாலன்றி இந்த மனத் துயரைத் தாங்க முடியாது' என்று சொல்லுகிறான். இந்த அன்பும் மரியாதையும் கைகேயிக்குச் சகிக்க முடியுமா ?

'தெவ்வடு சிலையினாய் !
தேவி தம்பியென்(று)
இவ்விரு வோரொடும்
கானத் தான்' என்றாள்.

[தெவ்வடு சிலையினாய் — பகைவர்களையெல்லாம் வெல்லக்கூடிய வில் ஏந்தியவனே. கானத்தான் — காட்டிருக்கிறான்.]

'அசட்டுப் பிள்ளை ! என்ன வீரம் ? இது பெண் பிள்ளையை விட மோசமாக நடந்து கொள்ளுகிறான் !' என்று பரிகாசம் தொனிக்கவே, கைகேயி, 'தெவ்வடு சிலையினாய் !' என்று பரதனை அழைக்கிறாள். எந்த ராமன் காலில் போய் விழவேண்டுமென்று பிள்ளை ஆசைப்படுகிறானோ அந்த ராமனுடைய இன்றைய விலாசம் காடுதான் ! என்று — தெரிவித்து விடுகிறாள். 'தேவி, தம்பி, ராமன் ஆகிய மூவருக்கும் அந்த ஒரே விலாசம் தான் !' என்றும் கூசாது கூறி விடுகிறாள். இடி விழுந்த மாதிரி விழுகிறது இந்தக் கொடிய வார்த்தை பரதன் காதிலே.

'தந்தை இறந்தான்' என்ற செய்தியாவது எதிர்பாராததாய் இருந்த போதிலும், வயசு காலத்தில் இறப்பது இயல்புதானே' என்று விவேகமானது ஒருவாறு ஆறுதல் செய்ய முயலும். ஆனால் உயிருக்கு உயிரான தமையன், தந்தை இறந்ததும் இராஜ்ய காரியம் பார்க்க வேண்டியிருக்க, ஏன் காட்டுக்குப் போக வேண்டும் ? 'ஐயோ! இன்னும் என்னென்ன கொடிய செய்திகளைக் கேட்க வேண்டுமோ ? இன்னும் என்னென்ன விளையப் போகிறதோ ?' என்று ஏங்கி இடிந்து போகிறது பரதனுள்ளம்.

ராமன் காடு சென்ற காரியத்தைப் பரதன் அறிந்து கொள்ள விரும்பித் தாயைக் கேள்வி கேட்கிறான். அவள் பதில் சொல்லுகிறாள் எக்களிப்புடன், — தான் வரம்பெற்ற வைபவத்தை யெல்லாம் :

வாக்கினால் வரந்தரக்
கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப்,
போக்கிப் பார்உனக்(கு)
ஆக்கினேன் ; அன்னது
பொறுக்க லாமையால்
நீக்கினான் தன்உயிர்
நேமி வேந்(து) !' என்றாள்.

[பார்-(இங்கே) இராஜ்யம். அன்னது-அது ; இராஜ்யம் உனக்கு ஆனது. நேமி வேந்து - ஆஜ்ஞா சக்கரத்தை ஏந்திய ராஜாதி ராஜனான தசரதன்.]

தான் தவறு ஒன்றும் செய்யாதது போல், எல்லாம் தசரதன் தவறு போலவே பேசிவிடுகிறாள் கைகேயி. சக்கரவர்த்தி வாக்குக் 'கடனாய்க் கொடுக்க வேண்டியிருந்த அந்த வரத்தைக் கொண்டே அவனுடைய மகனைக் காட்டுக்கு ஓட்டினேன் என்கிறாள். ' அதனால் என்ன கெட்டுப் போய்விட்டது ? உனக்கு இராஜ்யத்தை வாங்கி வைத்திருக்கிறேன் அல்லவா ?' என்கிறாள். ' இராஜ்யம் உனக்குக் கிடைத்தது பற்றி உன் அப்பனுக்கு ஆற்றாமைதான் !' என்று சொல்லி மகனுக்கு வெறுப்பை உண்டாக்கித் தந்தை மேலுள்ள பாசத்தை அறுத்துவிடப் பார்க்கிறாள். பிள்ளை மேலுள்ள பாசம் இப்படியெல்லாம் கைகேயியை நினைக்க வைக்கிறது, பேச வைக்கிறது. ' பரதனுக்கு இராஜ்யமா ?' என்று ஏங்கிச் செத்துப் போனானும். அந்த ஏக்கம் என்ற கருவியினாலேயே தசரதன் தற்கொலை செய்து கொண்டது போலப் பேசுகிறாள்.

துயரம் கோபமானது

இந்தப் பேச்சைக் கேட்ட பரதனுள்ளத்தில் கொதித்தெழுந்த கோபத்திற்குக் கங்குகரையில்லை. கைகளால் காதைப் பொத்திக் கொள்கிறான். புருவங்கள் படபடவென்று துடித்து கூத்தாடுவதுபோல் மேலும் கீழும் செல்லுகின்றன. கண்கள் இரத்தம் சொட்டுவது போலச் சிவக்கின்றன. பெருமூச்சு நெருப்புச் சுவாலையாக ஓடுகிறது. அந்தக் கொடிய கோபம் தாயென்றும் பாராமல் கொடுஞ் செயல்களில் இறங்கி விடுமோ ?—என்று கூடத் தோன்றுகிறது.

நாயெனும் பெயர்எனைத்
தடுக்கற் பாலதோ ?

[தடுக்கற் பாலதோ - தடுக்கக் கூடியதோ.]

—அதாவது ' தாய் என்று நீ வைத்துக் கொண்டிருக்கும் பெயர் இப்போது என்னைத் தடுக்கவில்லை !' என்று தாயை நோக்கிப் பேசும் பரதன் உள்ளத்தில் ' அவளைக் கொன்றொழித்து விடலாமா ?' என்ற கொடிய எண்ணம் கூட வந்து விட்டது போலிருக்கிறது.

சாந்த குண பூஷணனாகிய பரதன் மகாகோபிஷ்டனாக மாறிவிடுகிறான் வெகு விரைவில். துயரத்தின் சிகரத்தைக் கண்டவன் கோபத்தின் சிகரத்திலும் ஏறி நிற்கிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

189. ஒளியா, களங்கமா?

பெற்ற தாயின் பக்கத்தில் இருக்கவும் விரும்பாமல் பரதன் கோசலை இருக்குமிடம் போய்க் காலைப் பிடித்துக்கொண்டு கதறினான். 'அப்பா எவ்வுலகத்தில் இருக்கிறார்? அண்ணா எங்கே போய் விட்டார்?' என்றெல்லாம் குழந்தைபோலப் புலம்பிப் புரண்டு, 'கொடியவள் வயிற்றில் பிறந்த கள்வனாகிய நான் ஒழிந்தால், எல்லாத் துயரமும் ஒழிந்து விடுமே! சூரியன் போல் ஒளி பெற்றிருந்த குலத்துக்குப் பரதன் என்று ஒரு பழி வந்து விட்டதே! அடடா, நாட்டின் கதி எப்படியாகி விட்டது!' என்று அலறினான் பரதன்.

துன்ப இரவில் இன்பக் கனவு

இந்த அகத் தூய்மை கோசலையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ராமனே காட்டிலிருந்து திரும்பி வந்து விட்டது போலத் தோன்றியது. அப்படியே தழுவிக் கொண்டாள் மகனை:

தூய வாசகம்
    சொன்ன தோன்றலை,
தீய கானகம்
    திருவின் நீங்கி, முன்
போயினான் வரக்
    கண்ட பொம்மலாள்,
ஆய காதலால்
    அழுது புல்லினாள்.

[தூய வாசகம்—மனத் தூய்மையைப் பிரதிபலிக்கும் வார்த்தை. தோன்றல் — மகன். திருவின் நீங்கி — தனக்குக் கிடைத்த இராஜ்யத்தை விட்டு. பொம்மல் — மகிழ்ச்சி. ஆய — ஆகிய. புல்லினாள்—தழுவிக் கொண்டாள்.]

'தீமையின் சொரூபமான அந்தச் சக்காளத்தியின் மனநிலை என்ன! இந்தப் பிள்ளையின் செம்மை என்ன, செயல் என்ன!' என்ற சிந்தனை

யில், காடு சென்ற தன் பிள்ளையே திரும்பிவிட்ட உணர்ச்சி மட்டும் இல்லை, அந்த மகனை அப்பொழுதுதான் பெற்றெடுத்தது போன்ற ஓர் ஆனந்தக் கனவும் காண்கிறள் :

செம்மை நன்மனத்(து)
அண்ணல் செய்கையும்,
அம்மை நிமையும்
அறிதல் தேற்றினள்,
கொம்மை வெம்முலைக்
குமுறு பாலுக
விம்மி விம்மிநின்(று)
அழுது விங்கினள்.

[செம்மை நன்மனத்து – நேர்மையாகிய சிறந்த மனத்தையுடைய. அண்ணல் –(இங்கே) பரதன். அறிதல் தேற்றினள் – அறிந்து கொண்டவளாகிய கோசலை. கொம்மை – பருமை. பால் உக – பால் சிந்த. அழுது வீங்கினள் – முகம்வீங்க அழுதாள்.]

கோசலையின் பரத பட்டாபிஷேகம்

இங்கேயில் கோசலை பரதனை எப்படி வாழ்த்துகிறள் பாருங்கள் :

'முன்னை நுங்குல
முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே
நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவா!'
என்று வாழ்த்தினள்,
உன்ன உன்னநைந்(து)
உருகி விம்முவாள்.

[முன்னை – பழமையான. முதலுளோர் – முன்னோர். நீர்மையார் – தன்மை வாய்ந்தவர். உன்ன உன்ன-நினைக்க நினைக்க.]

'உன்னுடைய குலத்து மூதாதையரில் யாரே உனக்கு நிகராவர்?' என்று புகழ்ந்தோடு திருப்தி அடையாத கோசலையுள்ளம், 'மன்னர் மன்னவா!' என்று வாழ்த்துகிறது பரதனை. (சூரியன் போல் ஒளி பெற்றிருந்த குலம் பரதனால் மேலும் ஒளி பெற்று விட்டது என்பது கோசலை கருத்து.) அந்த அதிசயமான குணநிசயத்தை உள்ளவாறு உணர்ந்து கொண்டதும், 'அவனே சக்கரவர்த்தி! இந்தக் குண உரிமை போதுமே! வேறு உரிமையும் வேண்டுமோ?' என்று தோன்றுகிறது கோசலையின் தூய உள்ளத்திலே. 'நானே பரதன் தலையில் கிரீடத்தைத் தூக்கி வைத்து விடலாமா?' என்று ஆலோசித்து விட்டது போல வாழ்த்துகிறள். ஐயோ பாவம்! இந்தக் காரியத்திற்குக் கைகேயி என் தான் அவ்வளவு பிரமாதமாகச் சதியாலோசனை செய்திருக்க வேண்டுமோ?]

கோசலையின் ஹிருதயப் பிரதேசத்திலே பரத பட்டாபிஷேகம் நடந்து விட்டது! ஆனல் பரதனுடைய ஹிருதயம் என்ன பாடு படுகிறது! இத்தகைய சந்தர்ப்பததிலே வசிஷ்டரும் வந்து சேருகிறர்:

உன்ன உன்னநைந்(து)
உருகும் அன்புகூர்
அன்னை தாளின்விழ்ந்(து)
இளைய அண்ணலும்,


சொன்ன நீர்மையால்
தொழுது மாழ்கினன்;—
இன்ன வேலைவாய்
முனிவன் எய்தினன்.

[அன்புகூர் — அன்புமிக்க. இளைய அண்ணல் — பரதன். சொன்ன நீர்மையால் — 'சக்கரவர்த்தியே!' என்று தன்னைக் குறித்துக் கோசலை சொல்லிவிட்ட அந்தச் சொல்லினால். தொழுது மாழ்கினன்—தான் ஒரு வார்த்தையும் சொல்ல முடியாதபடி அவ்வளவு துன்பப்பட்டு அவள் அடிகளில் விழுந்து அயர்ந்து கிடந்தான். இன்ன வேலைவாய் — இந்தச் சமயத்தில். முனிவன் — வசிஷ்டர். எய்தினன் — வந்து சேர்ந்தான்.]

தருமத்தை நோக்கும் தருமம்

தன் பிராணனைக் கொடுத்துத் தருமத்திற்குப் பிராணப்பிரதிஷ்டை செய்துவைத்த சக்கரவர்த்தியின் அந்த உடம்பைத் 'தருமத்தின் வடிவமே அது' என்று பார்ப்பது போலப் பரதன் பார்க்கிறான்:

தன்னை நல்கிஅத்
தருமம் நல்கினன்
பன்னு தொல்லறப்
படிவம் நோக்கினன்.



[நல்கி — கொடுத்து. பன்னு-சிறப்பித்துச் சொல்லப்படுகிற. தொல்—பழமையான. அறப் படிவம் — தருமத்தின் வடிவம்.]

அப்படி அந்த உடம்பை நோக்கி மண்ணில் விழுந்து அலறிப் பிறகு அருகே சென்று அம்மேனி மீது கண்ணீர் வடிக்கிறான் பரதன் :

என்னெய் உண்டபோன்
எழில்கொள் மேனியைக்
கன்ன நீரினுல்
கழுவி ஆட்டினுன்.

[எழில் — அழகு. கண்ணநீர் — கண்களில் இருந்து பெருகின நீர்.]

பிறகு சக்கரவர்த்தியின் உடலைத் தங்க விமானத்தில் வைத்து யானை மேல் ஏற்றிக் கொண்டு போய்ச் சரயு ஆற்றங்கரையை அடைந்தார்கள். பரதன் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைச் செய்து தீர்க்கவேண்டும் என்று தாங்க முடியாத துயரத்துடன் வருகிறான். ஆனல் அப்பொழுது வசிஷ்டர் குறுக்கிட்டுத் தடுக்கிருர். ஏன்?

'அன்னை தீமையால்
அரசன் நின்னையும்
துன்னு துன்பத்தால்
துறந்து போயினுன்
முன்ன ரே!' யெனு
முனிவன் கூறினுன்.

[துன்னு — (அடுத்து அடுத்து) வந்த. எனு — என்று.]

தரும சிகரம்

'இவள் தாரம் அல்லள், துறந்தேன்; பரதனும் மகன் அல்லன்!' என்று தசரதர் முன்னமே சொன்ன வார்த்தையை வசிஷ்டர் ஞாபகப்படுத்தியதும், பரதன் என்ன செய்கிறான்? பாருங்கள்! அவன் ஒன்றுமே செய்யவில்லை; அப்படியே செத்துப் போகிறுன் என்றுதான் சொல்ல வேண்டும் :

இறந்து போயினுன்!
இருந்த(து) ஆண்(டு)அது
மறந்து வேறொரு
மைந்த னும்கொலாம்!

[ஆண்டு அது — அங்கே பரதன் இருப்பது போலத் தோன்றுவது. மைந்தன் ஆம் கொல் — வேறொரு மனிதன் போலும்.]

'கடைசியாக உள்ளடங்காத துயரம் மெல்ல மெல்ல வெளிப்பட்டு,

பிரெத பூசனைக்(கு)
உரிய பேறிலேன்,
அரசு செய்யவோ
அமைவ தாயினேன்?

[பிரெத பூசனை — பிரேதச் சடங்கு. பேறு — பாக்கியம். அமைவ தாயினேன் — தகுதியுடையவன் ஆனேன்.]

என்ற பிரலாப மொழிகளாக உருவெடுத்து வருகிறது. 'பிரேதச் சடங்கு செய்யவும் தகுதி பெருத எனக்கு அரசு செய்யவோ தகுதி வந்து விட்டது?' என்று அலறும் ஹிருதயத்திலே எத்தகைய களங்கமாவது இருக்க முடியுமா?

பரதன் தம்பி ஈமக்கடனை முடிப்பதோடு, திரை விழுகிறது; துன்ப நாடகம் ஒருவாறு முடிவு பெறுகின்றது. ஆனல் பரதன் துயரத்திற்கு முடிவோ. விடிவோ சமீபத்தில் ஏற்படப் போகிறதா?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

190. பரதன் பேர்னவழி

அமைச்சர்களும் படைத் தலைவர்களும், நகரத் தலைவர்களும், சிற்றரசர்களும் பெரியோர்களும் வந்து பரதனைச் சூழ்ந்து கொண்டார்கள். வசிஷ்டர் பக்கத்தில் இருந்தார். பரதனுடைய முகத்தைப் பார்த்ததும் ஒருவருக்கும் பேச நா எழவில்லை. எனினும், யாராவது சொல்லித்தானே ஆகவேண்டும். வசிஷ்ட முனிவருக்கும் தைரியமில்லையே, அந்தப் பேச்சை எடுப்பதற்கு?

மதி மந்திரி

சுமந்திரன் பார்த்தான், அந்த முகத்தை—முனிவர் முகத்தைத்தான். அந்தப் பார்வை பேச வேண்டியதைப் பேசிவிட்டது. அந்த நோக்கை வாக்கினால் உணர்த்துகிறார் முனிவர் பரதனுக்கு. ஏன் இந்தத் தயக்கம்? இவர்கள் பரதனுக்குத் தெரிவிக்கப் போகும் அந்தச் செய்திதான் என்ன?

பரதன் தன் கடமையை எப்படியும் செய்து தானே ஆகவேண்டும். சோகத்தில் மூழ்கிப் போய்விட்டது கடமையுணர்வு. அந்தச் சோகத்தையும் துயரத்தையும் மேலும் பொங்க விடா



மல், 'பரதன் இராஜ்ய காரியத்தைக் கவனிக்க வேண்டும்,—அரசு செய்ய வேண்டியது தான்' என்பதைச் சொல்லியாக வேண்டும். அப்படிப் பரதன் கடமையை உணர்த்துவது வசிஷ்டர் கடமைதான். அவரும் சோகத்தில கடமை யுணர்வை மறந்து விட்டாரா? இப்படி எண்ணினன், பரதனுடைய குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புள்ள சுமந்திரன். தசரதருக்கு மந்திரி — தேர்ப்பாகனுங் கூட,—நல்ல நண்பன். எனினும் பேசவேண்டியதைத் தான் பேசக் கூசித் தப்பிக்கொண்டு வசிஷ்டரைப் பேச வைக்கிறான். அவ்வளவு புத்திசாலி—புலமை வாய்ந்தவன்!

முனிவர் புத்திமதி

இராஜ்யத்தில் நீதியும் தருமமும் நிலை நாட்டுவதற்கு அரசு தக்க முறையில் நடைபெறவேண்டும் என்கிறார் வசிஷ்டர். நீதியின் காவலனாக இருக்கும்படி நீதியின் நிலையமாகிய பரதனை வேண்டுகிறார். 'தந்தையோ இறந்தான்; தமையனோ தந்தை வாக்கிற்குக் கட்டுப்பட்டு நாடு துறந்தான். அம்மைக்கு அவன் கொடுத்த வரத்தினால் உனக்கு உரிமையாகி விட்ட இந்தப் பேரரசை நீ பாதுகாப்பாய். இங்கே வந்து கூடிய எங்கள் எண்ணம் இது' என்று, எல்லாரும் ஒரு முகமாகச் செய்திருந்த அந்த ஆலோசனையைப் பரதனிடம் தெரிவித்தார் முனிவர்.

'இராஜ்யத்தை ஒப்புக் கொள்' என்று வசிஷ்டர் சொன்னது, 'நீ நஞ்சைச் சாப்பிடு, நாசமாய்ப் போ!' என்பது போல விழுந்ததாம் பரதன் செவியில்:

'தஞ்சம் இவ் வுலகம்நீ
தாங்கு வாய்' எனச்
செஞ்சேவே முனிவரன்
செப்பக் கேட்டலும்,
'நஞ்சினை நுகர்!' என
நடுங்கு வாரினும்
அஞ்சினன், அயர்ந்தனன்,
அருவிக் கண்ணினன்.

[தஞ்சம் — காவலாக. செஞ்சேவே — மிகவும் தெளிவாக. நுகர் — உண்பாய். நடுங்குவாரினும் — நடுநடுங்கும்படி கூறக் காட்டிலும். அயர்ந்தனன் — சோர்ந்தான். அருவிக் கண்ணினன் — அருவிபோலக் கண்ணீர் பெருக்கும் கண்களையுடையவனாய்.]

பரதனுக்கும் கோபமா?

பரதன் நடுங்கிக் கண் இருங்கிப் பேசமுடியாமல் நாக்குத் தழுமாற உயிர் ஒடுங்கிச் சிறிது நேரம் அப்படியே இருந்து, பின்பு உணர்வு பெற்றுத் தன் உள்ளக் கருத்தை ஒருவாறு தெளிவுபடுத்தினான். முதலில் கோபமாகவே பேசினான். 'முன்னே பிறந்த உரிமையாளன் இருக்க, நான் மகுடம் சூடி மகிழ்வது பெரியோர்களாகிய உங்களுக்குத் தருமமாகி விட்டது! சரி, உங்களுக்கும் கைகேயிக்கும் தான் என்ன வித்தியாசம்?' என்று வசிஷ்டர் முதலானவர்களைக் குறிப்பாய்ப் பழிப்பது போல் கடிந்து பேசிவிட்டான். ஆனால் 'இந்தக் கோபம் தர்மாவேசம் தான்!' என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.


'அரசாளுவது அண்ணன் கடமை தான்; அந்தக் கடமையிலிருந்து அவன் தப்பி விடாமல் காட்டிலிருந்து அழைத்து வந்து முடி சூட்டி வைப்பதே உங்கள் கடமை, தருமம். அதை விட்டு என்னை அரசனாக்கப் பார்ப்பது தருமக் கொலைதான்!' என்று சொன்னவன், அவர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறி விடும் பட்சத்தில், தான் செய்யப்போகும் காரியத்தையும் தெளிவுபடுத்தினான்:

அன்(று)எனின், அவனொடும்
அரிய கானிடை
நின்(று)இனி(து) அருந்தவம்
நெறியின் ஆற்றுவென்;
ஒன்றினி யுரைப்பின், என்
உயிரை நீக்குவென்!'
என்றனன்.........

[கானிடை — காட்டிலே. நெறியின் — முறைப்படி. ஆற்றுவென் — செய்வேன். ஒன்று இனி உரைப்பின் — (இந்த என் கொள்கைக்குமாறாக) ஒன்றைச் சொல்லி என்னைக் கட்டுப்படுத்த முயன்றீர்களானால்.]

ஆசையும் நிராசையும்

அந்த உறுதியையும் தியாக வெறியையும் கண்டு பிரமித்த அச்சபையோர், 'இந்தப் புகழுக்கு எந்தச் சக்கரவர்த்தியின் புகழ் தான் ஈடாகும்? இந்தத் தியாகத்திர்கு எந்த யாகம் தான் ஒப்பாகும்?' என்று கோஷித்தார்கள். ஆனந்த வெள்ளம் பொங்க, அவர்கள் வாழ்த்திய வாழ்த்தொலியைக் கேளுங்கள்:



'ஆழியை உருட்டியும்,
அறங்கள் போற்றியும்,
வேள்வியை இயற்றியும்
வளர்க்க வேண்டுமோ?
ஏழிரே(டு) ஏழ்எனும்
உலகும் எஞ்சினும்,
வாழிய நின்புகழ்!'
என்று வாழ்த்தினர்.

[ஆழி — சக்கரவர்த்தியின் ஆக்ஞா சக்கரம். ஏழிரேடு ஏழ் எனும் உலகும் — பதினாலு உலகங்களும். எஞ்சினும் — அழிந்து போனாலும். வாழிய — வாழ்ந்திடுக; வாழக் கடவது.]

இந்தப் பாட்டைப் பாடிப் பார்க்கும்போது, அந்த ஆனந்தப் பேரலைகள் நம் காதில் வந்து அப்படியே மோதுவது போலிருக்கிறது.

சோர்ந்து கிடந்த பரதனுடைய உள்ளத்தில் ஓர் எழுச்சி உண்டாகி விட்டது. தம்பி சத்துருக்னனைக் கூவியழைத்து, 'ராமனை அயோத்திக்குக் கொண்டு வந்து விடுவோம்' என்று பறைசாற்றச் சொன்னான்.

ஜனங்களுக்கெல்லாம் 'ராமன் திரும்பி வந்து முடிசூடுவான்!' என்ற ஒரே ஆசை தான். கைகேயிக்கோ ஆசையெல்லாம் நிராசையாகிவிட்டது. ஜனங்கள், படைத் தலைவர், மந்திரிமார், தாய்மார் எல்லாரும் புறப்பட்டார்கள், இரதங்களிலும் குதிரைகளிலும் யானைகளிலும் ஏறிக் கொண்டு. அந்தத் தாய்மார்களில் கைகேயியும் உண்டு. இதைக் காட்டிலும் அதிசயம் கூனியும் பயணமானது தான்.

கூனியையும் அந்தக் கூனையும் கண்டதும், தம்பி சத்துருக்னனுக்கு ஒரே ஆத்திரம் பொங்கிவிட்டது 'எமன் போலத் தோன்றிய இவளை எமலோகத்திற்கே பயணமாக்கி விடுவோம்!' என்று கொதித்தெழுந்த தம்பியைப் பரதன் விலக்கிச் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு போனான். எல்லாரும் வாகனங்களில் போக, பரதன் எப்படிப் போனான் அந்தக் காட்டு வழியெல்லாம்? 'ராமன் காட்டுக்கு எப்படிப் போனான்?' என்று விசாரித்துக் கொண்டான்; தானும் அப்படியே போனான்:

'ஆண்டுநின்(று) ஆண்தகை
அடியின் ஏகினன்
ஈண்டிய நெறி!' எனத்,
தானும் ஏகினன்,
தூண்டிடு தேர்களும்
துரக ராசியும்
காண்தகு கரிகளும்
தொடரக்,— காலினே!

[ஆண்டு நின்று — அயோத்தியிலிருந்து. ஆண்தகை — ராமன். அடியின் ஏகினன் — நடந்து தான் போனான். ஈண்டிய நெறி — காடு அடர்ந்த பாதை. துரகராசி — குதிரைத் தொகுதி. காண்தகு — பார்க்கக் கம்பீரமான. கரி — யானை.]

ஏறிப் போகத் தேரிருக்க, யானையிருக்க, குதிரையிருக்க, 'அதோ பார்த்தையா, காலினால் நடந்து போகிறான்!' என்று எவ்வளவு சோகமாய்க் காட்டுகிறான் கவிஞன். தேர்களும் குதிரைகளும் யானைகளும் பின்தொடர நடந்து போகும் தர்மாத்மாவின் — தியாகமூர்த்தியின் — அந்தக் காலைத் தானும் பார்த்து நாமும் பார்க்கக் காட்டி விடுகிறான்.

இப்படிப் பரதன் போன வழியில் இப்போது போகும் கைகேயி தான் திருந்தாமலிருக்கப் போகிறாளா?